بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 4:6, ரபீஉல் அவ்வல், 1429, பக்கங்கள்=12+4

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email : suvanam@gmail.com, www.suvanam.com

## ரபீஉல் அவ்வல் மாதமும் முஸ்லிம்களும்

*- மௌலவி இப்ராஹீம் மதனி M.A.*

ரபீஉல் அவ்வல் மாதம் வந்தாலே முஸ்லிம்களில் சிலருக்கு பெரும் மகிழ்ச்சியும் சந்தோசமும் வந்துவிடும். காரணம் இது நபி(ஸல்) அவர்கள் பிறந்த மாதம். இது அருள் நிறைந்த மாதம். உலகத்தை ஒளிபெறச் செய்யும் மாதமுமாகும், ஆகவே இந்த மாதத்தை கொண்டாடும் மாதமாக எடுத்துக் கொள்வது நபி(ஸல்) அவர்களை நேசிக்கும் அடையாளமாகும் என்று எண்ணி மீலாது விழாக்களும் மௌலிது ஷரீபுகளும்? வெகு கோலாகலமாக பல முஸ்லிம்களின் வீடுகளிலும் பள்ளிகளிலும் நடைபெறும். இஸ்லாத்திற்கும் இச்செயலுக்கும் என்ன தொடர்பிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### நபி(ஸல்) அவர்களை நேசிப்பது (வாஜிபாகும்) கட்டாயமாகும்

நபி(ஸல்) அவர்களை நேசிப்பது இஸ்லாத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். யார் தன் பிள்ளை பெற்றோர் மற்றும் எல்லா மனிதர்களை விடவும் நபி(ஸல்) அவர்களை நேசிக்க வில்லையோ அவர் உண்மையான முஃமினாக முடியாது.

**அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்:**

*(நபியே!) நீர் கூறும்; உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்கு பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டு வருவதை எதிர்பார்த்து இருங்கள் - அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை. (அல்குர்ஆன் 9:24)*

தன் பெற்றோர், பிள்ளை மற்றும் எல்லா மனிதர்களை விடவும் நான் நேசமுள்ளவராக ஆகும் வரை உங்களில் எவரும் உண்மையான முஃமினாக முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி

என் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக தன் பெற்றோர் இன்னும்

தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க ...

## கருத்துச் சுதந்திரமா? ஆணவமா?

*- ஷேர்ஷா*

கடந்த 2005-ம் ஆண்டு செப்டம்பரில், முஹம்மது நபி(ஸல்) அவர்களை கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் டென்மார்க்கிலிருந்து வெளிவரும் ஜீலன்ட்-போஸ்டன் பத்திரிக்கை 12 கேலிச் சித்திரங்களை வெளியிட்டது.

ஜீலன்ட் பத்திரிக்கை வெளியிட்ட 12 கேலிச்சித்திரங்களில் பதினொன்று நபி(ஸல்) அவர்களைப் பயங்கரவாதியாகவும் மற்றொன்று அவர்களைப் பாலியல் வாதியாகவும் சித்தரிக்கும் வகையில் வரையப்பட்டிருந்தன. துப்பாக்கி, வாள் ஆகியவைகள் பிடித்துக் கொண்டு இருப்பது போன்றும், அவர்கள் தலைப்பாகையில் வெடிகுண்டு இருப்பது போன்றும் கேலிச்சித்திரங்கள் வெளியாயின.

இக்கேலிச் சித்திரங்கள் வெளிவந்தது முதல் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் டென்மார்க் நாட்டிற்கும் ஜீலன்ட் பத்திரிக்கைக்கும், அதை வரைந்தவருக்கும் எதிராக எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. முஸ்லிம்கள் மட்டுமல்லாது மனிதப் பண்புடைய அனைவரும் உலகளவில் டென்மார்க் நாட்டுக்கு எதிராகக் குரல் எழுப்பின. எதிர்ப்புகள் வலுவடையவே அந்த பத்திரிக்கையின் வலைதளத்திலிருந்து 12 கேலிச்சித்திரங்களும் நீக்கப்பட்டன. எனினும் இன்று வரை அப்படங்கள் வெவ்வேறு வலைதளங்களில் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

தற்போது அந்தக் கேலிச் சித்திரங்களையே மறுபடியும் செய்தியாக்கி வெளியிட்டு உலக முஸ்லிம்களின் மனதை காயப்படுத்தியுள்ளன.

கடந்த பிப்ரவரி 13, புதன் அன்று மீண்டும் இந்தக்

### உள்ளே!

பணவீக்கமும் வட்டியும் - 3
காசு வாங்காத கான்வென்ட் - 5
நீரிழிவு நோயை வெற்றி கொள்வோம் - 6
இறை நினைவுகள் - 11
சர்ப்ப தோஷம் - 12
எம்.எஸ் வேர்டில் சில எளிய வழிகள் - 13
மக்கா - மதினா அதிவேக இரயில் திட்டம் - 14
அல்லாஹ்வின் அற்புத படைப்புகள் - 15
அறிவுப் போட்டி - 16

கேலிச்சித்திரங்களை ஜீலன்ட், பெர்லின்கே (Berlingske Tidende) ஆகிய ஐரோப்பிய பத்திரிக்கைகள் வெளியிட்டன. இதனால் உலகெங்கும் மீண்டும் டென்மார்க்கிற்கு எதிர்ப்பு உருவாகியுள்ளது.

இஸ்லாத்தை இழிவுபடுத்துதல், திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளை திரித்து எழுதுதல் போன்ற செயல்கள் தொன்று தொட்டு மேலைநாடுகள் இஸ்லாத்திற்கு எதிராக செய்துவரும் முயற்சிகள் ஆகும். இவர்களுக்கு நன்றாகத் தெரியும் இஸ்லாத்தில் உருவ வழிபாடு என்பதும் இல்லை. முஹம்மது நபி(ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் உருவமாக வரைந்தால் இஸ்லாமியர்கள் மனம் புண்படும் அவர்கள் இக்காரியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும். எனினும் அவர்களின் நோக்கம் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் இழிவுபடுத்த வேண்டும் என்பதேயாகும்.

கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் இத்தகைய ஆணவச் செயலை மீண்டும், மீண்டும் டென்மார்க் புரிந்து வருகின்றது. உலக முஸ்லிம்கள் மற்றும் மனிதப் பண்புள்ள அனைவரும் டென்மார்க்கின் இத்தகைய செயலுக்குக் கடின எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவிக்க வேண்டும். பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தில் டென்மார்க் வீழ்ச்சியடைய அவர்களின் தயாரிப்புகளை முற்றிலும் புறக்கணிக்க வேண்டும்.

*விசுவாசங்கொண்டோரே! யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் (உங்களுக்கு) நண்பர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள், **(உங்களுக்கு விரோதம் செய்வதில்) அவர்களில் சிலர், சிலருக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றனர்,** உங்களில் எவரேனும் அவர்களை(த் தனக்கு)ப் பாதுகாவலராக்கிக் கொண்டால், அப்போது நிச்சயமாக அவரும் அவர்களில் உள்ளவர்தாம், நிச்சயமாக அல்லாஹ் (இந்த) அநியாயக்கார சமூகத்தார்க்கு நேர்வழி காட்ட மாட்டான்'. (திருக்குர்ஆன் 5:51)*

# குரங்குகளும் பேசிக்கொள்ளும் ஆய்வில் தெரியவந்த அதிசயம்!

குரங்குகளும் மனிதர்களைப் போல, ஒன்றுக்கொன்று பேசிக்கொள்வதும், குரல் வித்தியாசத்தை உணர்ந்து கொள்வதும் ஜெர்மன் குழுவினர் நடத்திய ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. ஆசிய குட்டைவால் இன குரங்குகள் இந்த ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டன. பல்வேறு ஒலிகளை எழுப்பி, அதை குரங்குகள் உணர்கின்றனவா என்பது பரிசோதிக்கப்பட்டது. மனிதர்களைப் போலவே, குரங்குகளிலும், மூளையில், ஒலிகளை உணரும் பகுதி இருப்பது தெரியவந்தது. ஒலியின் தன்மைக்கு ஏற்ப, மூளைப்பகுதியில் மாற்றம் ஏற்படுவது, எம்.ஆர்.ஐ, ஸ்கேன் மூலம் உறுதி செய்யப்பட்டது. குரங்குகளின் மூளைப்பகுதியில், ஒலி உணரும் பகுதி இருப்பதால், தங்கள் இன குரங்குகளுடன் பல்வேறு ஒலி சமிக்கைகளுடன் அவை பேசிக்கொள்கின்றன. ஒவ்வொரு குரங்கின் குரலுக்கும் வித்தியாசம் உணர்ந்து கொள்கின்றன. குரங்குகளின் ஒலியை துல்லியமாக உணரும் அதே நேரத்தில், பிற விலங்குகள், பூச்சிகள், மழை, இடி போன்றவற்றை தெளிவாக உணர்வது இல்லை. இந்த ஒலிகள், இவற்றின் மூளையில் உள்ள ஒலி உணரும் பகுதியில், குறைந்தளவே மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்த ஆராய்ச்சியின் மூலம், குரங்குகளை வைத்து, மனிதர்களுக்கு குரல் இழப்பு, செவித்திறன் இழப்பு குறித்த காரணங்களை கண்டுபிடிக்க முடியும் என்ற புதிய கோணம் ஏற்பட்டுள்ளது.

நன்றி: பரபரப்பு (20.02.08)

# பணவீக்கமும் வட்டியும்

- அபூ ஆஸியா

இந்தியர்கள் வலிமையுள்ளவர்களாக மாறி வருகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் ரூ.200 மதிப்புள்ள மளிகை பொருட்களை தூக்கி வர இரண்டு திடகாத்திரமான வாலிபர்களைத் தேட வேண்டி இருந்தது. ஆனால், இன்று 5 வயது சிறுவன் அதே இருமடங்கு மதிப்புள்ள பொருட்களை தூக்கி வர இயல்கிறது.

மேற்கூறியவற்றிலிருந்து நாம் அறிவது என்ன? காலப்போக்கில் நாமும் நம் சந்ததியினரும் உடல் வலிமையில் மெருகேறியிருக்கின்றோமா? அல்லது எவரின் கட்டுப்பாட்டிலும் இல்லாமல் விலைவாசி விண்ணை நோக்கி உயர்கின்றதா? அல்லது யாரோ தங்களுடைய நகைச்சுவை உணர்ச்சியை வெளிப்படுத்தும் முயற்சியில் வெளியிட்டவையா? சற்றே யோசித்து பார்க்கும் பொது நகைச்சுவை இல்லை என்பதை உணர்வதோடு மட்டுமல்லாது ஆழமாக சிந்திக்க வேண்டிய விஷயம் என்பதும் புலனாகிறது. 'விலைவாசி என்னும் விஷயம் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏறத்தான் செய்யும். இதில் நகைச்சுவை என்ன வேண்டி இருக்கிறது?' என்று யாரோ முனகும் குரல் காதில் விழாமல் இல்லை.

கண் கூடாக நாம் காணும் இத்தகு விலைவாசி உயர்வு பொருளாதார நிபுணர்களால் அவ்வளவு எளிதாக அலட்சியப் படுத்திவிடக் கூடிய ஒரு அம்சம் அல்ல. இதைத்தான் அந்த மேதைகள் 'பணவீக்கம்' என்று பந்தாவாகக் குறிப்பிடுகின்றனர். உலகெங்கும் பெரும்பாலான வல்லுனர்களால் அடிக்கடி விவாதிக்கப்படும் இந்த பணவீக்கம் பற்றி மேலோட்டமாக எடுத்தியம்பும் முயற்சியே இக்கட்டுரை!

பணவீக்க விகிதம் அனைத்து நாடுகளிலும் சதவீதத்தில் குறிப்பிடப்படுகிறது. இவ்வாண்டுப் பணவீக்க விகிதம் 5% என்று மேதாவித்தனமாக யாராவது பேசுவார்களேயானால், சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு பொருட்களின் விலை 5 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதே அதன் பொருள். உதாரணமாக, சென்ற வருடம் ரூ. 100க்கு வாங்கிய ஒரு பொருளை இவ்வாண்டு ரூ. 105 செலவிட வேண்டி இருக்கும். நம்மில் எத்தனை பேருக்கு பத்து ரூபாய்க்கு பெட்ரோல் வாங்கிய தினங்கள் நினைவிருக்கின்றன? இப்போது எதற்காக ஐந்து மடங்கு பணம் செலுத்துகிறோம்? பணவீக்கம் அதிகரித்ததால் விலை ஏறவில்லை; மாறாக விலை ஏறியதால் தான் பணவீக்கம் அதிகரித்துள்ளது. பல அத்தியாவசிய பொருட்களின் ஒட்டுமொத்த விலை குறியீட்டு எண் ஒவ்வொரு வாரமும், சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடப்பட்டு, இந்த வாரத்தின் பணவீக்கம் எந்த அளவில் உள்ளது என நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மகத்தான பணியை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) செவ்வனே ஆற்றி வருகின்றது.

பணவீக்க விகிதம் ஒரு குறிப்பிட்ட தேசத்தையும் அதன் குடிமக்களையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம் அல்லவா? சுருக்கமாக அதை சுட்டிக்காட்டாவிடில் இக்கட்டுரை முழுமை பெறாது என்பதில் தெளிவாகவே உள்ளோம்.

கருப்பு வெள்ளை தொலைக்காட்சியில் பார்த்துப் பார்த்து வெறுத்துப் போய் வண்ணத் தொலைக்காட்சி வாங்க முடிவு செய்து ஐந்தாறு கடைகளில் விசாரித்து அதன் விலை ரூ.10,000 என அறிகிறீர்கள். இத்தருணத்தில் உயிர் நண்பர் ஒருவர் குடும்பச் சிக்கலின் காரணமாகப் பத்தாயிரம் வேண்டும் என்றும், அதனை ஒரு வருடத்தில் திருப்பி தருவதாகவும் உறுதி அளிக்கிறார். வண்ணத் தொலைக்காட்சி வாங்கும் எண்ணத்தை அடுத்த ஆண்டுக்கு ஒத்தி வைத்து விட்டு, நண்பருக்கு உதவ முடிவு செய்கிறீர்கள். எதிர்பாராத விதமாக அடுத்த ஆண்டு பண வீக்கம் 5% அதிகரித்து விடுகிறது. இதனால் ரூ. 10,000-க்கு வாங்க இருந்த தொலைக்காட்சி இப்பொழுது அதன் விலை ரூ.10,500 (5% அதிகம்) உயர்திருக்கிறது. பணவீக்கம் காரணமாக இதே பொருளை அடுத்த ஆண்டு வாங்க ரூ.500 கூடுதலாக செலவிட நேரிடுகிறது. இதனை கருத்தில் கொண்டு மக்களில் பலர் கடனை 5% வட்டிக்கு கொடுத்து அந்த பணவீக்கத்தை சரிசெய்ய நினைக்கின்றனர்.

மேலும், நீங்கள் பணியாற்றும் நிறுவனத்தில் உங்கள் சம்பளம் 2% அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 6% பணவீக்கம் உள்ள ஆண்டில் நிகழ்கிறது. மற்றுமோர் ஆண்டு முதலாளி உங்கள் சம்பளத்தை 2% குறைக்கிறார் (-2% அதிகரிப்பு). இப்போது பணவீக்கம் 0% ஆக உள்ளது. குறிப்பிட்ட இந்த இரண்டு ஆண்டுகளில் எந்த ஆண்டு உங்களை மகிழ்ச்சியிலும், சோகத்திலும் ஆழ்த்தும்? மனோதத்துவ ரீதியாக 2% அதிகரிப்பு கிட்டிய ஆண்டு உங்களை மகிழ்ச்சியிலும், 2% சம்பள குறைப்பு சோகத்திலும் ஆழ்த்தியிருக்கும். ஆனால் இதனைச் சற்றே உற்று நோக்கினால் சம்பளம் அதிகரிக்கப்பட்ட ஆண்டு, உங்களிடம் இருந்த பணத்தின் வாங்கும் திறன் (purchasing power) ஊதிய அதிகரிப்பு நிகழாத ஆண்டை விட குறைவாகவே இருந்தது என்னும் உண்மை புலனாகும். கைக்கு வரும் பணம் கூடுதலாக இருப்பினும், அதனின் மதிப்பு குறைவாகவே இருக்கும் இந்த நிலையை தான் பொருளாதார நிபுணர்கள் 'பண மாயை' (money illusion) எனக் குறிப்பிடுகின்றனர்.

இந்த பணவீக்கத்தின் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டே பங்குசந்தை நிலவரம் மேலும் கீழும் ஏறி, இறங்குவதை காண முடிகிறது. பங்குச் சந்தைகளில் பணவீக்கமும் அதன் விளைவாக வட்டி விகிதமும் அதிகரிக்கும் அல்லது குறையும் சூழலில், வருவாயும் அதிகரிக்கும் அல்லது குறையும். பல நிறுவனங்கள் தங்கள் தொழிலை நடத்த வட்டிக்கடன் வாங்கித்தான் காலம் தள்ளுகின்றன. அதிகரித்த வட்டி விகிதத்தினால் நிறுவனங்களின் வட்டிச் சுமை கூடுகிறது. இலாபத்தில் பெரும் பகுதி வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தவே சரியாய்ப்போய் விடுவதால் பல நிறுவனங்களை இழுத்து மூட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதிலிருந்து வட்டி விகிதம் பணவீக்கத்துடன் எவ்வாறு பயணிக்கிறது என அறிந்தோம். பணவீக்கம்

அதிகமானால் வட்டி வீதமும் அதிகரிக்கும். பணவீக்கம் குறைந்தால் வட்டி வீதமும் குறையும்.

இன்றைய உலகில் பணம் அதிகமாக சேர்க்கவேண்டும் என்ற பேராசையால் பல தீமைகள் மனித வர்க்கத்தால் தீமை என்றே உணரப்படவில்லை. இவற்றில் வட்டி முதலிடத்தை வகிக்கின்றதென்றால் அது மிகையாகாது. மனிதர்களில் பெரும்பாலோர் வட்டியை ஒரு தீமையாகவே கருதுவதில்லை. ஆனால் சமுதாயத்தில் இது எவ்வளவு பெரிய சுயநலவாதிகளையும், பேராசைக்காரர்களையும், சகோதர மனப்பான்மை அற்றவர்களையும், பொருளாதார வீழ்ச்சியையும் உருவாக்குகிறது என்பதை யாரும் உணருவதில்லை ஏன்?

இத்தகைய சமுதாயத் தீமையாகிய வட்டியை விட்டு முஸ்லிம்கள் விலகாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியதே. இதற்கு முக்கிய காரணம், பலர் இதை ஒரு பெரும் பாவமாகக் கருதவில்லை என்பதேயாகும். ஆனால் இறைமறையும், நபி மொழியும் இதை மிகப்பெரும் பாவமாகக் கருதி மனித குலத்தை எச்சரிப்பதை பாருங்கள்.

### ஒட்டுமொத்தமாக எல்லா வட்டியும் ஹராம் என்று கூறும் வசனங்கள்

*ஈமான் கொண்டோரே! இரட்டித்துக் கொண்டே அதிகரித்த நிலையில் வட்டி (வாங்கித்) உண்ணாதீர்கள்; இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி (இதைத் தவிர்த்துக்கொண்டால்) வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன் 3:130)*

*யார் வட்டி(வாங்கி) உண்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய்) எழமாட்டார்கள்; இதற்குக் காரணம் அவர்கள், "நிச்சயமாக வியாபாரம் வட்டியைத் போன்றதே" என்று கூறியதினாலேயாம்; அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்; ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது; ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின்பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள். (அல்குர்ஆன் 2:275)*

*ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உண்மையான மூஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வுக்கு அஞ்சியடங்கி, எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டுவிடுங்கள். இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப்பட்டு விட்டது. நீங்கள் தவ்பா (இப்பாவத்திலிருந்து) மீண்டுவிட்டால், உங்கள் பொருள்களின் அசல் (முதல்) உங்களுக்குண்டு. (கடன்பட்டோருக்கு) நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள்- நீங்களும் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள். (அல்குர்ஆன் 2:278,279)*

### வட்டியை ஹராம் என்று கூறும் ஹதீஸ்கள்

வட்டி வாங்குபவர், வட்டி கொடுப்பவர், வட்டிக் கணக்கை எழுதுபவர், வட்டியின் சாட்சிகள் ஆகியோரை நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். அவர்கள் அனைவரும் பாவத்தில் சமமானவரே.

அறிவிப்பாளர்: ஜாபிர்(ரலி)

ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி, முஸ்னத் அஹ்மத்

இறைவன் நான்கு பேரை சுவர்க்கத்திற்கோ அல்லது அதனுடைய சுகத்தை அனுபவிப்பதற்கோ விட மாட்டான் அவர்கள்:

1. குடிப்பதை வழமையாகக் கொண்டவர்கள். 2. வட்டி வாங்கித் தின்றவர்கள். 3. அநாதைகளின் சொத்தை அநியாயமாக அபகரித்தவர்கள். 4. பெற்றோரைத் துன்புறுத்தியவர்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி)

ஆதாரம்: ஹாக்கிம்

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக வட்டிப் பொருள் வளர்ந்த போதிலும், உண்மையில் அதன் இறுதிப் பலன் நாசம்தான்.

அறிவிப்பாளர்: இப்னுமஸ்ஊத் (ரலி).

ஆதாரம்: திர்மிதி, நஸயீ

வட்டித்தொழில் செய்து சாப்பிட்டவர் மறுமையில் தட்டழிந்து தடுமாறும் பைத்தியக்காரராகவே எழுப்பப்படுவார்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி),

ஆதாரம்: இப்னு அபீஹாத்திம்

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களுக்கு ஒரு காலம் வரும். அக்காலத்தவர் தமது சம்பாத்தியம் ஹலாலானதா? ஹராமானதா? முறையானதா? முறையற்றதா? என்பனவற்றைப் பொருட்படுத்தாது இருப்பர்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி),

ஆதாரம்: புகாரி

வட்டி வாங்குபவரையும் வட்டி கொடுப்பவரையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள்.

அறிவிப்பவர்: இப்னுமஸ்வூத்(ரலி),

ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி

எனவே நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாலும், அல்லாஹ் நமக்கு நிர்ணயித்ததைவிட ஒரு சதவீதம் கூட அதிகமாக பெற இயலாது. மேலும் அல்லாஹ் நாடியதை அடையும் முன் மரணிக்கவும் முடியாது. ஆகவே வட்டியை முற்றாக தவிர்த்து ஆகுமாக்கப்பட்ட வழியிலேயே பொறுளாதாரத்தை திரட்டுவோமாக!

# ரத்த அழுத்தத்தை குறைக்கும் பீட்ரூட் சாறு!

தினமும் பீட்ரூட் சாறு குடித்தால் ரத்த அழுத்தம் குறையும் என்று பிரிட்டன் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

நாம் சமையலுக்கு பயன்படுத்தும் பீட்ரூட், கீரை போன்றவற்றில் நைட்ரேட் சத்து உள்ளது. பீட்ரூட் சாறை தினமும் குடித்து வந்தால் அல்லது நைட்ரேட் சத்து அடங்கிய காய்கறிகளை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உயர் ரத்த அழுத்தம் குறையும்.

லண்டன் மருத்துவக் கல்லூரி ஆய்வுக்குழுவின் தலைவர் அம்ரிதா அலுவாலியா இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

# காசு வாங்காத கான்வென்ட்... அசத்தல் அரசுப்பள்ளி!

- *இறைநேசன்*

சகிப்புத் தன்மையும், அர்ப்பணிப்பு குணமும் இருந் தால் அரசுப் பள்ளியைக் கூட கான்வென்ட் ரேஞ்சுக்கு மாற்றிவிட முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ஒரு தலைமை ஆசிரியர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கிக்குப் பக்கத்தில் இருக்கிறது மாங்குடி கிராமம். சரியான போக்குவரத்து வசதிகூட இல்லாத இங்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இருக்கிறது. மாங்குடியை சுற்றியிருக்கிற பத்து கிராமங்களின் ஏழை மற்றும் நடுத் தரக் குடும்பத்துக் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விக்கு இதுதான் ஒரே பள்ளி. வழக்கமான அரசுப் பள்ளிகள் போலவே இயங்கி வந்த இந்த பள்ளியில் மூன்றாண்டுகளுக்கு முன் ஜோதிமணி என்பவர் தலைமை ஆசிரியராக வந்த பிறகு, மளமளவென மாற்றங்கள்!

மூன்றே ஆண்டுகளில் 'யூனிஃபார்மில் அசத்தும் மாணவ-மாணவிகள், வகுப்பறை தவறாமல் பெஞ்ச்-டெஸ்குகள், ஒவ்வொரு வகுப்பறைக்கும் கேபிள் இணைப்புடன் கூடிய டி.வி-க்கள், வகுப்பறைக் குள்ளேயே பைப்பைத் திருகினால் குடிநீர், கம்ப் யூட்டர் கல்வி, தையல் பயிற்சி, கைத்தொழில் பயிற்சிகள்' என பள்ளியை பிரமாதப்படுத்தியிருக்கிறார் ஜோதிமணி.

இதனால் கவரப்பட்ட கல்வித்துறை உயரதிகாரிகள்... புதுகை, தஞ்சை, சிவகங்கை மாவட்ட ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன்கூடிய விடுப்பு கொடுத்து, இந்தப் பள்ளி நடக்கும் விதத்தைப் பார்த்துவிட்டு வரும்படி அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கான மாவட்டத்தின் சிறந்த பள்ளியாகவும் இப்பள்ளி தேர்வாகியிருக்கிறது.

"எப்படி? இப்படி சாதிக்க முடிந்தது?" என்று ஜோதிமணியிடம் கேட்டோம்.

"இந்தப் பள்ளியில 260 ஸ்டூடன்ட்ஸ் படிக்கிறாங்க. நான் வந்த புதுசில் மாணவர்கள் மட்டுமில்லை, சில ஆசிரியர்கள்கூட பள்ளிக்கு சரியா வர்றதில்லை. பள்ளிக் கூடத்தைச் சுத்தி ஒரே காடா இருந்துச்சு. இருந்தாலும், நமக்கு குடுத்திருக்கிற வேலையை சரியா செஞ்சா எல்லாத்தையும் மாத்திடலாம்னு நெனைச்சேன். அதுக்கு ஊர் மக்கள் ஒத்துழைப்பு கொடுத்தாங்க.

நான் இங்கே வந்த அடுத்த மாசம் தீபாவளி... அப்ப பேரன்ட்ஸ் மீட்டிங் போட்டு 'இந்த வருஷம் உங்க பிள்ளைகளுக்கு எடுக்கிற டிரெஸ்ஸை யூனிஃபார்மாவே எடுத்துடுங்க'னு சொன்னேன். இதில் சில குழந்தைகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாம். ஆனா, பெற்றோர் அப்படியே செஞ்சாங்க. அதுதான் எனக்குக் கிடைத்த முதல் வெற்றி. அதுக்கப்புறம் காம்பவுண்ட் சுவர், கம்ப்யூட்டர் வசதின்னு நீங்க இப்போ பார்க்கிறதுல முக்கால் வாசியை ஆறே மாசத்துக்குள் கொண்டு வந்துட்டோம்" என்று சொன்னவர்,

"ஐந்தாம் வகுப்பு மாணவன் ஆங்கில வார்த்தைகளை எழுத்துக்கூட்டி படிக்கிற அளவுக்கு இருந்தாலே போதும் என்கிறது கல்வித்துறை சட்டதிட்டம். நான் இங்கு வந்தபோது, எட்டாம் வகுப்பு படிக்கிறவன் தமிழைப் படிக்கவே தடுமாறினான். ஆனா, இப்ப ஐந்தாம் வகுப்பு மாணவனுக்கு எட்டாம் வகுப்பு மாணவனுக்கான கல்வி அறிவைக் கற்றுக் கொடுத்திருக்கிறோம். மாணவிகள் ஒரு வாரமானாலும்கூட ஜடையை அவிழ்த்து கட்டாம வந்துட்டிருந்தாங்க. அதை மாத்துறதுக்காக ஒரு நாள் ஒத்தை ஜடையும், மறுநாள் ரெட்டை ஜடையும் போட்டுட்டு வரணும்னு கண்டிஷன் போட்டோம். அதுலருந்து தினசரி தலைக்கு எண்ணெய் வைத்து சுத்தமா வாரிக் கொண்டு வர ஆரம்பிச்சுட்டாங்க.

மாணவர்களுக்கிடையே கடிதம் எழுதும் திறனை வளர்க்கணும்கிறதுக்காக ஒவ்வொரு வகுப்பறையிலும் தபால் பெட்டிகளை வச்சிருக்கோம். ஒவ்வொரு வகுப் பிலும் மாணவர்களுக்குள்ளேயே ஒரு போஸ்ட்மேனும் போஸ்ட் மாஸ்டரும் இருக்கிறார்கள். மாணவ போஸ்ட் மாஸ்டரிடம் 50 காசு குடுத்தால் அவர் 'கார்ட் போர்டு' அட்டையிலான ஐந்து போஸ்ட் கார்டுகளைத் தருவார். ஸ்டூடன்ட்ஸ் அதை வாங்கி பக்கத்து வகுப்பிலிருக்கும் தனது தோழிக்கோ தோழனுக்கோ கடிதம் எழுதி தபால் பெட்டியில் போட்டுவிடுவார்கள். அந்தத் தபால்களை எடுத்து உரிய மாணவரிடம் சேர்ப்பது 'போஸ்ட்மேனின்' வேலை.

மாணவர்களுக்குத் தொழிற்கல்வியைக் கத்துக் கொடுக்கிறதுக்காக வருஷத்துக்கு 5,500 ரூபாய் கொடுக்குது அரசாங்கம். அதுல சாம்பிராணி, ஊதுபத்தி செய்யுறதை சொல்லிக் குடுத்தாப் போதும்னு சொல்றாங்க. நாங்க கூடுதலாப் பணத்தைப் போட்டு ரெண்டு தையல் மெஷினை வாங்கிப் போட்டோம். தையல் பயிற்சி குடுக்குறதுக்காக ஒரு டீச்சரையும் நியமித்தோம். இப்ப எங்க பசங்கள்ல பலர் தங்களுடைய டிரெஸ்களை மட்டுமில்லாம அடுத்தவங்களுக்கும் டிரெஸ் தச்சுக் குடுக்கிற அளவு தேர்ந்துட்டாங்க. கிராமத்தினரும் சக ஆசிரியர்களும் ஒத்துழைப்பு கொடுக்காட்டி என்னால இதையெல்லாம் சாதிச்சுருக்க முடியாது" என்றார் அடக்கத்துடன்.

நகர்ப்புற பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பலரே கம்ப்யூட்டர் பற்றிய நேரடி அறிமுகம் இல்லாமலிருக்க, இங்கே ஐந்தாம் வகுப்பு மாணவர்கள்கூட கம்ப்யூட்டரை இயக்கி 'பிரின்ட்-அவுட்' எடுக்குமளவுக்குப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மாணவர்களிடம் வாசிப்புத் திறனை வளர்ப்பதற்காக ஒரு ஆங்கில தினசரி உள்பட நான்கு தினசரிகளை வாங்கிப் போடுகிறார்கள். இதில் ஒன்றை மாணவர்கள் செலவிலேயே வாங்கிப் போடுகிறார்கள். இவற்றில் வெளிவரும் செய்திகளை பிரேயரில் மாணவர்களே வாசித்தும் காட்டுகிறார்கள். யாராவது ஒரு ஆசிரியர் லீவிலிருந்தால் அவர் நடத்த வேண்டிய பாடம் வகுப்பறையில் சி.டி. பிளேயர் மூலம் ஒளிபரப்பாகிவிடும்!

தலைமை ஆசிரியர் ஜோதிமணியைப் பற்றி சக ஆசிரியரான மேகநாதன் நம்மிடம், "இந்தப் பள்ளியில் ஜோதிமணி சாருக்குக் கீழே நாங்களும் பணிபுரிவதைப் பெருமையா நினைக்கிறோம்" என்கிறார் நெகிழ்வுடன்.

இப்பள்ளியின் முன்னாள் மாணவரான சக்திவேல், "நாங்க படிக்கிறப்பெல்லாம் பதினோரு மணிக்குத்தான்

வாத்தியாரே வருவார். இன்டர்வெலுக்கு வெளியில போனா திரும்ப வரவே மாட்டோம். 'ஏன் வரலை?'னு கேக்குறதுக்குக்கூட ஆள் இருக்காது. ப்ரௌஸிங் சென்டர் வச்சுருக்கிற எனக்கே கம்ப்யூட்டரை முழுமையாக உபயோகிக்கத் தெரியாது. ஆனா, இந்தப் பசங்க சர்வ சாதாரணமா கம்ப்யூட்டர்ல புகுந்து விளையாடுறதைப் பார்த்தா, நாங்க படிச்சப்பவே இந்த மாற்றங்கள் வரலியேனு ஏக்கமா இருக்குங்க" என்கிறார்.

மாங்குடி ஊராட்சிமன்றத் தலைவரான பாலாமணி ரெங்கசாமி, "எங்க ஊரு பிள்ளைகலெல்லாம் பணம் வாங்காத கான்வென்ட்ல படிச்சுக்கிட்டிருக்காங்க! இந்தப் பள்ளியோட வளர்ச்சிக்காக எதைக் கேட்டாலும் செஞ்சு குடுத்துட்டுத்தான் மறு வேலை. கூடிய சீக்கிரமே இங்கே இருக்கிற லைப்ரரி ஹாலுக்கு ஏ.ஸி. வசதி பண்ணிக் குடுக்கப்போறோம்" என்றார் பெருமிதத்துடன்.

அர்ப்பணிப்பு உணர்வு என்ற வார்த்தையை அடிக்கடி கேள்விப்படுகிறோம். அரசுப் பணிகளில் அது அபூர்வமாகிவிட்ட இந்த நாளில், வாழும் உதாரணமாக விளங்கும் ஜோதிமணி போன்ற விதிவிலக்குகளுக்கு அரசாங்கம் நிறையவே ஊக்கமும் அங்கீகாரமும் தரவேண்டும். அதுதான் அர்ப்பணிப்புக்குத் தருகிற அற்புதமான மரியாதையாக இருக்கும்.

**நன்றி :- ஜூனியர் விகடன். Feb 24-28, 2008**

# நீரிழிவு (Diabetics) நோயை வெற்றிக்கொள்வோம் (சர்க்கரை)

*- அபூ உமர்*

இனிவரும் தலைமுறைகள் அம்மி, அடிப்பம்பு, உலக்கை, குடக்கல் போன்றவற்றை மியூசியத்தில் மட்டும்தான் பார்க்க முடியும் என்பதை உண்மைபடுத்தும் விதமாக, வாழ்வின் அன்றாட தேவைகளுக்கு எலக்ட்ரிகல் சாதனங்களையே நம்பி வாழ்கிறோம். இச்சாதனங்கள், நம்மை அறியாமலேயே உடல் உறுப்புகளுக்கு இலவசமாக கிடைத்துக்கொண்டிருந்த பயிற்சிகளை தடுத்து, பலவித நோய்களில் அல்லல் பட காரணமாக அமைந்துவிட்டன. இன்றைய சூழ்நிலையில் உலகின் மிகப்பெரிய நோய்களில் நீரிழிவு நோயும் ஒன்றாகும்.

ஆண்டின் இறப்பு விகிதத்தில் 5 சதவீதமானோர் நீரிழிவு நோயாளிகளாக இருக்கின்றனர். அதில் 80 சதவீதமானோர் குறைவான மற்றும் நடுத்தர வருவாய் உள்ள நாடுகளில் உள்ள 45லிருந்து 64 வயதுக்குட்பட்டவர்கள்.

உலகிலேயே இந்தியாவில்தான் இந்நோய்க்கு ஆட்பட்டவர்கள் அதிகம். அதிரடியான தடுப்பு வழிகள் எடுக்கப்படாவிட்டால், நீரிழிவு நோயாளிகளின் இறப்பு விகிதம் அடுத்த 10 ஆண்டுகளில் 50 சதவீதம் அதிகமாகும் என உலக சுகாதார மையம் (WHO - World Health Organization) எச்சரித்துள்ளது. இந்தியாவில் 2000-ல் 31.7 சதவீதம் இருந்த இந்நோய் 2030-ல் 79.4 சதவீதமாக அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீரிழிவு நோயாளிகள் அதிகம் உள்ள 10 நாடுகள்:

1) இந்தியா
2) சீனா
3) அமெரிக்கா
4) இந்தோனேசியா
5) ஜப்பான்
6) பாகிஸ்தான்
7) ரஷ்யா
8) பிரேஸில்
9) இத்தாலி
10) பங்களாதேஷ்

அதிகமான உடல் பருமன் கொண்டவர்களாலும் உடலுழைப்பு இல்லாதவர்களாலும் இந்நோய் அதிரடியாக அதிகரித்து வருகிறது. சில நாடுகளில் முன்னெப்போதும் காணாத அளவு, குழந்தைகளிடமும் வயதுவந்தவர்களிடமும் சுமார் பாதியளவை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

2005ஆம் ஆண்டு மட்டும் 1.1 மில்லியன் மக்கள் இந்நோயால் இறந்துள்ளார்கள். நீரிழிவு நோயுடன் வாழ முடியும் என்றாலும் கூட அவர்களின் இறப்பு, இருதய மற்றும் சிறுநீரக நோய்களால் முந்திக்கொள்கிறது. எனவே அனைவரும் இந்நோய் பற்றிய அதிகப்படியான விஷயங்களை அறிந்துக் கொண்டு, "வருமுன் காப்பதும்" வந்தபின் தொய்ந்துப் போகாமல் எதிர்கொள்வதும் அவசியமாகும்.

அடிக்கடி சிறுநீர் கழித்தல், அடிக்கடி தாகமெடுத்தல், அதிக பசி, குறுகிய காலத்தில் எடை குறைதல், அதிகமாக சோர்வடைதல், கண்பார்வை மங்குதல், வெட்டு காயம் அல்லது சிராய்ப்பு ஆகியவை ஆறுவதற்கு அதிக காலம் பிடித்தல், திரும்ப திரும்ப சருமம், ஈறு மற்றும் சிறுநீர்ப்பையில் தொற்று நோய் போன்றவை நீரிழிவு நோய்க்கு அறிகுறிகள். எனவே, தகுந்த மருத்துவரை கலந்தாலோசிப்பது அவசியமாகும்.

இந்நோய் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம் என்றாலும்கூட, 40 வயதை தாண்டியவர்கள், பரம்பரையில் நீரிழிவு நோய் இருப்பவர்கள் மற்றும் எடை அதிகமாக இருப்பவர்களுக்கு அதிக வாய்ப்புண்டு. இதனால், பார்வை இழப்பு, மாரடைப்பு, சிறுநீரகக் கோளாறு, பக்கவாதம், கால்களை இழத்தல், கோமா மற்றும் இறப்பு போன்றவை ஏற்படலாம்.

நீரிழிவு நோய் என்பது தீரா நோய் என்றாலும் கூட, முறையான மருந்து, கட்டுப்பாடான உணவு முறை, தினந்தோறும் குறைந்தது 30 நிமிட உடற்பயிற்சி செய்வது மூலமாக இந்நோயை வெற்றிக்கொள்வோமாக.

**உதவிக் குறிப்புகளுக்கு பயன்பட்ட தளங்கள்:**

1) www.who.int - உலக சுதாதார மையத்தின் இணையத்தளம்

2) ta.wikipedia.org - கட்டற்ற கலைக்களஞ்சியம் விக்கிப்பீடியா

*ரபிஉல் அவ்வல் ... மாதம் முதல் பக்கத் தொடர்ச்சி...*

பிள்ளைகளைவிடவும் நான் நேசமுள்ளவராக ஆகும் வரை உங்களில் எவரும் உண்மையான முஃமினாக முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி

(ஒருநாள்) நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது நபி(ஸல்) அவர்கள் உமர்(ரலி) அவர்களின் கையை பிடித்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! என்னைத் தவிர மற்ற எல்லா உயிரினங்களையும் விட உங்களை நான் மிகவும் நேசிக்கின்றேன் என உமர்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் என் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக உன்னை விட நான் மிக நேசமுள்ளவராக ஆகும் வரை நீர் உண்மையான முஃமினாக முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு உமர்(ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக இப்போது நீங்கள் என் உயிரை விடவும் என்னிடத்தில் மிக நேசமானவர்கள் எனக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் இப்போதுதான் நீங்கள் உண்மையான முஃமீன் எனக்கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி

இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமும் நபி(ஸல்) அவர்களை உண்மையான முறையில் நேசிப்பது வாஜிபாகும் (கட்டாயமாகும்).

## நபி(ஸல்) அவர்களை நேசிப்பது எப்படி?

நபி(ஸல்) அவர்களை நேசிப்பதென்பது அல்லாஹ்வும் இன்னும் அவனின் தூதர் நபி(ஸல்) அவர்களும் ஏவியவைகளை எடுத்தும் தடுத்தவைகளை தடுத்தும் நடப்பதுதான் உண்மையான நேசமாகும். இப்படித்தான் நபி(ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும்.

## அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்

***(நபியே!) நீர் கூறும், "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான். மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 3:31)***

யார் என்னுடைய இயற்கை பண்புகளை நேசிக்கின்றாரோ அவர் என் வழியை பின்பற்றட்டும், திருமணமும் என் வழியாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனன் ஸயீத் இப்னு மன்ஸுர், சுனனுல் குப்ரா லில் பைஹகி)

## நபித்தோழர்கள் நபி(ஸல்) அவர்களை எப்படி நேசித்தார்கள்?

கண்ணியத்திற்குரிய நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் வாழ்க்கையை அடிதவறாமல் பின்பற்றினார்கள் என்று சொல்வதைவிட நபி(ஸல்) அவர்களின் அசைவுகளையும் பின்பற்றினார்கள் என்பதுதான் பொருத்தமாகும். அதைக் குறிப்பிடும் சில வரிகள்..

1. நீங்கள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களை எப்படி நேசிக்கக்கூடியவர்களாக இருந்தீர்கள்? என அலி(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக நபி(ஸல்) அவர்கள் எங்களின் பொருட்கள், பிள்ளைகள், தந்தை, தாய்மார்கள் மற்றும் தாகத்தின் போது குளிர் தண்ணீரை விடவும் எங்களிடம் மிகவும் நேசமுள்ளவர்களாக இருந்தார்கள் என விடை பகிர்ந்தார்கள்.

2. மக்கா முஷ்ரிக்கீன்களுக்கு அடிமையாக இருந்த ஜைத் இப்னு ததினா என்னும் நபித்தோழரை கொலை செய்வதற்காக மக்கா முஷ்ரிக்கீன்கள் ஹரத்தின் எல்லையை விட்டும் வெளியே எடுத்துச் சென்ற போது அபூ சுஃப்யான் இப்னு ஹர்பு(ரலி) அவர்கள் (அப்போது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை) கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக உன்னை உன் குடும்பத்தோடு வாழ விட்டுவிட்டு உன் இடத்தில் முஹம்மதை வைத்து அவரின் கழுத்து துண்டாடப்படுவதை நீ விரும்புவாயா? அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் என் குடும்பத்தோடு இருந்து நபி(ஸல்) அவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்திலேயே நோவினை தரும் ஒரு முள் குத்துவதைக்கூட நான் விரும்பமாட்டேன் எனக் கூறினார்கள். அப்போது அபூ சுஃப்யான் இப்னு ஹர்பு(ரலி) அவர்கள் முஹம்மதை அவரின் தோழர்கள் நேசிப்பது போன்று மனிதர்களில் யாரும் யாரையும் நேசிப்பதாக நான் பார்க்கவில்லை என்று கூறினார்கள்.

3. நபி(ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்ற வதந்தி உஹது யுத்தத்தில் பரவிய போது நபித்தோழர்கள் திகைத்துப் போனார்கள். அப்போது ஒரு நபித்தோழி திகைத்துப் போன நிலையில் நபி(ஸல்) அவர்களின் நிலையை அறிந்து கொள்வதற்காக உஹதுப் போர்களத்திற்கு வந்தபோது தன்னுடைய மகன், தந்தை, கணவன் இன்னும் சகோதரர் ஷஹீதாக்கப்பட்ட செய்தியைக் கேள்விப்படுகின்றார்கள். அவர்களில் யாரை முதலில் பார்த்தார்கள் என்பது எனக்குத் தெரியாது அந்த நபித்தோழி ஷஹீதாக்கப்பட்டவர்களை கடந்து செல்லும் போதெல்லாம் இவர் யார் என வினவிய போது இது உமது தந்தை, உமது சகோதரர், உமது கணவர், உமது மகன் என்று சொல்லப்பட்டது. அப்படி சொல்லப்படும் போதெல்லாம் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எங்கே? என்றுதான் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் கொஞ்சம் முன்னால் நிற்கின்றார்கள் என நபித் தோழர்கள் கூறினார்கள். நபி(ஸல்) அவர்களைப் பார்த்த அவர்கள் அன்னாரின் ஆடையின் ஓரத்தைப் பிடித்தவாறு, பின்பு கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே! என் தாயும், தந்தையும் அற்பணமாகட்டும், நீங்கள் நலமடைந்து விட்டால் நான் எந்த அழிவைப்பற்றியும் கவலைப்படமாட்டேன் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ்(ரலி) ஆதாரம்: தப்ராணி

மற்றொரு அறிவிப்பில்: உங்களின் நலத்திற்குப் பின் எல்லா கஷ்டங்களும் மிக இலேசானதே என்றார்கள். (ஷீறா இப்னு ஹிஷாம்)

நபித்தோழர்களும் நபித்தோழிகளும் உண்மையாகவே நபியவர்களை நேசித்தார்கள் என்பதற்கு இது போன்ற எத்தனையோ வரலாற்றுக் குறிப்புகளை கூறலாம். நபி(ஸல்) அவர்கள் ஏவியதையும் தடுத்ததையும் நபித்தோழர்கள் எடுத்தும் தடுத்தும் நடந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், நபி(ஸல்) அவர்களுக்காக தன் உயிரையே அற்பணித்தார்கள். நபியவர்களின் விருப்பத்தை தன் விருப்பமாக்கினார்கள். இப்படித்தான் நபி(ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும்.

இவை அனைத்தையும் விட்டுவிட்டு, ரபீஉல் அவ்வல்

மாதத்தில் நபியவர்கள் பேரில் மௌலிது படித்துவிட்டு அல்லது மீலாது விழா நடத்திவிட்டு நாம் நபி(ஸல்) அவர்களை புகழ்ந்து விட்டோம் என்பது போலி நேசமாகும். இன்னும் இவர்களில் அதிகமானவர்கள், நபி(ஸல்) அவர்களின் சுன்னத்திலிருந்து வெகு தூரமானவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மௌலிது படிப்பதும் மீலாது விழா நடத்துவதும் நபி(ஸல்) அவர்களை நேசிப்பதாக இருந்திருந்தால் அதை நிச்சயமாக நபித்தோழர்கள் செய்திருப்பார்கள். ஆனால் நபித்தோழர்களோ, தாபியீன்களோ, தப்உத்தாபியீன்களோ, சிறப்பிற்குரிய எந்த இமாம்களோ இதைச் செய்யவில்லை. அதாவது சிறப்புக்குரிய மூன்று நூற்றாண்டிலும் இது நடைபெறவில்லை, இதை முதலில் அரங்கேற்றியவர்கள் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த பாதினிய்யா கூட்டத்தைச் சேர்ந்த ஃபாத்திமியின்கள் என்பவர்கள்தான். இஸ்லாத்தில் இல்லாதவைகளை இஸ்லாத்தில் நுழைய வைக்க வேண்டும் என்பதற்காகவே இதைச் செய்தார்கள்.

ஃபாத்திமியீன்கள் யார் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமாகும். இவர்கள் பாதினிய்யா (பல தவறான கொள்கைகளை உள்ளடக்கியவர்கள் என்பது இவ்வார்த்தையின் பொருளாகும்) என்னும் இஸ்லாத்திற்கு எதிரான கொள்கையை கொண்டுள்ள யூத பரம்பரையைச் சேர்ந்த அப்துல்லா இப்னு மைமூன் அல் கத்தாஹ் என்பவனின் வம்சாவழியாவார்கள். இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள். இஸ்லாமியப் போர்வையிலே இஸ்லாத்தை அழிக்க முற்பட்டவர்கள். இஸ்லாத்தின் அடிப்படைகளை தகர்த்துவிட்டு இஸ்லாத்தில் இல்லாதவைகளை இஸ்லாமியப் பெயரில் இஸ்லாத்தினுள் நுழைத்தவர்கள். அலி(ரலி) அவர்களை இறைவனென்றும் அல்லது நபித்துவத்திற்கு தகுதியுள்ளவரென்றும் வாதிடக்கூடியவர்கள். நபித்தோழர்களை ஏசுபவர்கள். மறுமையை மறுப்பவர்கள், காபிர்கள், நெருப்பு வணங்கிகள். தவறான வம்சாவழியில் உள்ளவர்கள் என்ற பல குற்றச்சாட்டுகளை இவர்கள் மீது இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றார்கள். இவர்களைப் பற்றி சில இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள் பின்வருமாறு.

➢ இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதர்களில் மிகக் கெட்டவர்களும் மிகவும் அல்லாஹ்வை நிராகரிப்பவருமாவார்கள். யாராவது இவர்கள் ஈமான் உள்ளவர்கள் என்றோ அல்லது இறையச்சம் உள்ளவர்கள் என்றோ அல்லது நல்ல வம்சாவழியில் உள்ளவர்கள் என்றோ கூறினால் அவர்கள் பற்றிய அறிவில்லாமல் அவர்களுக்கு சான்று கூறுவதேயாகும். அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

*எதைப்பற்றி உமக்கு(த் தீர்க்க) ஞானமில்லையோ அதை(ச் செய்யத்) தொடரவேண்டாம்; நிச்சயமாக (மறுமையில்) செவிப்புலனும், பார்வையும், இருதயமும் இவை ஒவ்வொன்றுமே (அதனதன் செயல் பற்றி) கேள்வி கேட்கப்படும். (அல்குர்ஆன் 17:36)*

➢ அல் காழி அபூபக்ரில் பாகில்லானி(ரஹ்) அவர்கள் 'இரகசியத்தை வெளிப்படுத்தி முகத்திரையை கிழிப்பது' என்ற தனது பிரபல்லியமான புத்தகத்தில் கூறுகின்றார்கள்:

நெருப்பு வணங்கிகளின் வம்சா வழிகள், இவர்களின் கொள்கை யூத கிறிஸ்தவர்களின் கொள்கையைவிட மிக மோசமானது. அலி(ரலி) அவர்களை கடவுளென்றும் அல்லது அவர்கள் தான் நபியென்றும் வாதிடுபவர்களைவிட மிகவும் கெட்டவர்கள்.

➢ அல் காழி அபூ யஃலா(ரஹ்) அவர்கள் தனது 'அல் முஃதமது' என்னும் புத்தகத்தில குறிப்பிடுகின்றார்கள்.

'மறுமையை மறுப்பவர்கள், இறைநிராகரிப்பாளர்கள்'

இன்னும் பல இஸ்லாமிய அறிஞர்களும் இவர்கள் முனாஃபிக்குகள், மறுமையை மறுப்பவர்கள் இஸ்லாத்தை வெளியில் காட்டிகொண்டு உள்ளே குஃப்ரை மறைத்து வைப்பவர்கள், இவர்கள் யூத மற்றும் நெருப்பு வணங்கிகளின் வம்சாவழியினர் என்ற ஒற்ற கருத்தை கொண்டுள்ளனர்.

இவர்கள், ஹிஜ்ரி 362 ரமளான் மாதம் பிறை 5ல் எகிப்தின் ஆட்சியை கைப்பற்றினார்கள். இவர்கள்தான் நபி(ஸல்) அவர்கள் மீது பிறந்தநாள் (மீலாது) கொண்டாடுவதை முதலில் ஆரம்பித்தவர்கள். இவர்கள் நபி(ஸல்) அவர்கள் மீது மாத்திரம் இவர்கள் மீலாது விழாவை ஆரம்பிக்கவில்லை அவர்களின் குடும்பத்தாரான ஃபாத்திமா(ரலி), அலி(ரலி), ஹஸன்(ரலி), ஹுஸைன்(ரலி) இன்னும் ரஜப் முதல் இரவு மற்றும் அம்மாதத்தின் நடு இரவை கொண்டாடுவது, அவ்வாறு ஷஃபான் முதல் மற்றும் நடுஇரவு இன்னும் இது போன்ற பல கொண்டாட்டங்களை இவ்வுலகிற்கு முதன்முதலாக அறிமுகம் செய்தவர்கள். இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தார்கள் மீதும் மீலாது விழா நடத்தியது இஸ்லாத்தையோ நபி(ஸல்) அவர்களையோ நேசித்ததற்கல்ல! இஸ்லாமியப் போர்வையில் இஸ்லாத்தை அழிப்பதற்காகவும் முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டும் உண்மையான அகீதாவை (கொள்கையை) விட்டும் தூரமாக்குவதற்குத்தான்.

மீலாது விழாக்களுக்காக பல இலட்சக்கணக்கான தொகையை உணவுக்காகவும் இனிப்பு பண்டங்களுக்காகவும் அன்பளிப்புகளுக்காகவும் அரசு பணத்தில் செலவு செய்து அன்றைய தினத்தை அரசு விடுமுறையாகவும் பிரகடனம் செய்தார்கள். இவ்வாறு செய்ததினால் அதிக மக்களின் உள்ளங்களிலே அவர்கள் பற்றிய நல்லெண்ணங்களை பெற்றுக் கொண்டார்கள். இதனால் அவர்களுடைய ஆட்சியும் நீண்டது. அவர்களின் கொள்கையும் மக்கள் மத்தியில் மிக வேகமாக பரவியது. இதற்காகவே இந்த மீலாது நாடகத்தை அவர்கள் அரங்கேற்றினார்கள்.

அவர்கள் எகிப்தின் ஆட்சியை கைபற்றிய போது யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் நெருப்பு வணங்கிகளுக்கு அவர்களின் அரச சபைகளிலும் அரசாங்க வேலை வாய்ப்புகளிலும் இடமளித்தார்கள். மந்திரிகளாகவும் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரான முஸ்லிம்களை கொடுமைப்படுத்தினார்கள். மேலும் அவர்களை தங்களின் கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். அரசாங்க வேலை வாய்ப்பு பெறுவதற்கு அவர்களின் கொள்கையை ஏற்றுக் கொள்வதை நிபந்தனையாக்கினார்கள். இதனால் பல யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஷீஆ (ஷியா) கொள்கையை தங்களின் கொள்கையாக (மத்ஹபாக) ஏற்றுக் கொண்டார்கள். அரசாங்க தொழிலிலுள்ள

அனைவரும் அவர்களின் கொள்கையை எற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். நீதிமன்றத்திலுள்ள நீதியரசர்களையும் அவர்களின் கொள்கைப்படியே தீர்ப்பளிக்க வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தார்கள்.

ஹிஜ்ரி 372ல் எகிப்தை ஆட்சி செய்த பாத்திமிய்யீன்களின் மன்னரான அபுல் மன்சூர் நஸார் இப்னுல் முஇஸ் இப்னுல் காயிம் இப்னுல் மஹ்தி அல் உமைதி என்பவர் ரமளான் மாதத்தில் தொழப்படும் தராவிஹ் தொழுகையை தடைசெய்தார். ஹிஜ்ரி 393ல் லுஹா தொழுத 13 பேரை மூன்று நாட்கள் சிறையிலடைத்து தண்டனையும் வழங்கினார். ஹிஜ்ரி 381ல் முஅத்தா இமாம் மாலிக் என்னும் ஹதீத் கிரந்தம் ஒருவரிடத்தில் இருந்த காரணத்தினால் அவரை ஊரைச்சுற்றவைத்து அவமானப்படுத்தி அவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. ஹிஜ்ரி 395ல் எல்லாப் பள்ளிவாசல்களின் உள்பக்கமும் வெளிப்பக்கமும் பள்ளியின் கதவுகளிலும் இன்னும் மண்ணறைகளிலும் முன்னோர்களான நபித்தோழர்களையும் நல்லடியார்களையும் அவமதிக்கும் வாசகங்கள் எழுதப்பட்டும் பொறிக்கப்பட்டுமிருந்தது. அவர்களின் கடைசி மன்னரின் ஆட்சி காலம்வரை நபித்தோழர்களை அவர்களின் மிம்பர்களிலும் மேடைகளிலும் ஏசுவது அவர்களின் சின்னமாக காணப்பட்டது.

இத்தோடு அவர்களின் ஆணவத்தை அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் மன்னர்களில் ஒருவரான மன்சூர் இப்னு நஸார் என்னும் அல் ஹாகிம் என புனைப் பெயர் சூட்டப்பட்டவர் தன்னை கடவுள் நிலைக்கே கொண்டு வந்துவிட்டார். மிம்பரில் குத்பா பிரசங்கம் செய்யும் இமாம், இவருடைய பெயரை கூறிவிட்டால் இவரை கண்ணியப்படுத்துவதற்காக மக்கள் எல்லோரும் எழுந்து நின்று விடுவார்களாம். இவரின் பெயர் கூறப்பட்டால் இவருக்காக சுஜூது செய்யும்படி மிஸ்ர் நாட்டு மக்களுக்கு அவர் கட்டளையும் இட்டிருந்தார், அவ்வாறே அம்மக்களும் செய்தார்கள். எந்தளவுக்கென்றால் ஜும்ஆத் தொழுகைகூட தொழாதவர்கள், இவரின் பெயர் கேட்டு அவர்கள் கடைவீதிகளில் இருந்தால் கூட சுஜூதில் விழுந்து விடுவார்களாம்.

அவர்களின் ஆட்சி காலத்தில் மிம்பரிலும் வேறு மேடைகளிலும் நபித்தோழர்களை ஏசினார்கள், சபித்தார்கள். குறிப்பாக மூன்று கலீபாக்களையும் (அபூபக்ர்(ரலி) உமர்(ரலி) உத்மான்(ரலி)) விமர்சித்தார்கள், இம்மூவரும் அலி(ரலி) அவர்களின் பகைவர்கள் எனக் கூறினார்கள்.

ஆறாம் நூற்றாண்டின் கடைசி அல்லது ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இர்பில் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர் முளஃப்பர் அபூ ஸயீத் கோக்பூரி என்பவர் இவர்களுக்குப் பின் மக்கள் மத்தியில் இந்த மீலாது மேடையையும் மௌலிது ஷரீபையும்? மிக பிரபல்லியப்படுத்தினார்.

இப்னு கதீர்(ரஹ்) அவர்கள் 'அல்பிதாயா வன்னிஹாயா' என்னும் வரலாற்றுக் குறிப்பில் 'அபூ ஸயீத் கோக்பூரியின்' வரலாற்றைக்கூறும் போது - ரபீஉல் அவ்வல் மாதத்தில் மௌலிது ஓதி மாபெரும் மீலாதுவிழாக் கொண்டாடுவார். இவர் ஏற்பாடு செய்யும் மௌலிது விருந்துபசாரத்தில் சுடப்பட்ட ஐந்தாயிரம் ஆடுகளும் பத்தாயிரம் கோழிகளும் ஒரு இலட்சம் தயிர்க்கோப்பைகளும் முப்பது ஆயிரம் ஹல்வாத் தட்டுக்களும் ஏற்பாடு செய்வார் என்று, இவர் ஏற்பாடு செய்த சில மௌலிது விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட ஒரு சிலர் கூறினார்கள். இன்னும் ளுஹர் நேரத்திலிருந்து ஃபஜ்ர் நேரம் வரை ஸூஃபியாக்கள் பாட்டுப்பாடுவதற்காக ஒலிபெருக்கிகளை ஏற்பாடு செய்து அவர்களுடன் சேர்ந்து இவரும் நடனமாடுவார்.

ஆதாரம்: அல்பிதாயா வன்னிஹாயா

### அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இதுதான் மீலாது விழாவின் லட்சணம்! இவர்கள்தான் மீலாது விழாவை உலகிற்கு இறக்குமதி செய்தவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இதுதான் நபி(ஸல்) அவர்களை நேசிக்கும் முறையா? நிச்சயமாக இல்லை. நபி(ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப் பின்பற்றுவதுதான் அவர்களைப் நேசிப்பதற்கு உண்மை அடையாளமாகும்.

மீலாது விழா கொண்டாடுபவர்கள் எடுத்து வைக்கும் சில சந்தேகங்களும் அதற்குரிய விடைகளும்.

### சந்தேகம் -1

மீலாது விழாக் கொண்டாடுவது நபி(ஸல்) அவர்களை கண்ணியப்படுத்தவதாகும்.

**விடை:** நபி(ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துவதென்பது அவர்கள் ஏவியதை எடுத்தும், தடுத்ததை தவிர்த்தும் நடப்பதாகும். பித்அத்துக்களையும் பாவங்களையும் செய்வது நபி(ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துவதாகாது. மீலாது விழாக் கொண்டாடுவது அந்த பாவமான காரியத்தைச் சேர்ந்ததே. நபித்தோழர்கள் நபி(ஸல்) அவர்களை அதிகம் கண்ணியப்படுத்தியவர்கள். அவர்கள் மீலாது மேடை நடத்தவில்லை. மீலாது மேடை நடத்துவது நபி(ஸல்) அவர்களை கண்ணியப்படுத்தவதாக இருந்திருந்தால் நிச்சயம் அதை நபித்தோழர்கள் செய்திருப்பார்கள். நபித்தோழர்கள் நபி(ஸல்) அவர்களை எந்தளவு கண்ணியப்படுத்தினார்கள் என்பதை பின்வரும் ஹதீது தெளிவுபடுத்துகின்றது.

உர்வா இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் கைஸர், கிஸ்ரா, நஜ்ஜாசி மன்னர்களிடம் சென்றிருக்கின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் நபி(ஸல்) அவர்களை நேசிப்பது போல் வேறு எந்த மன்னர்களையும் அவர்களின் தோழர்கள் நேசிப்பதாக நான் பார்க்கவில்லை. நபி(ஸல்) அவர்கள் எச்சில் துப்பினால் அதை அவர்களில் ஒருவர் தன் உள்ளங்கையால் பிடித்து தன் முகம் மற்றும் மேனியில் தேய்த்துக் கொள்கின்றார்கள். ஏதாவது செய்யும்படி ஏவினால் அதைச் செய்வதற்காக ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு செல்கின்றனர். அவர்கள் ஒழுச் செய்தால் அவர்களின் மேனியில் இருந்து விழும் தண்ணீரை எடுப்பதற்காக ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்கின்றனர். நபி(ஸல்) அவர்கள் பேசினால் அவர்களின் சப்தத்தை குறைத்துக் கொள்கின்றனர். நபி(ஸல்) அவர்களின் மீது அவர்கள் வைத்திருக்கும் கண்ணியத்திற்காக நபி(ஸல்) அவர்களின் முகத்தை அவர்கள் கூர்ந்து பார்ப்பதில்லை.

ஆதாரம்: புகாரி

இவ்வளவு கண்ணியம் காத்த நபித்தோழர்கள் ஒரு

தடவைகூட மீலாது மேடை நடத்தவில்லை. மீலாது மேடை நடத்துவது நபி(ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துவதாக இருந்திருந்தால் நிச்சயம் அதைச் நபித்தோழர்கள் செய்திருப்பார்கள்.

### சந்தேகம் -2

பல நாடுகளில் அதிக மக்கள் செய்கின்றார்கள்.

**விடை:** நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்தான் ஆதாரமாகும். மக்கள் செய்யும் செயல்கள் ஆதாரமாக முடியாது, அவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் சரியே. நபி(ஸல்) அவர்கள் எல்லா பித்அத்துக்களையும் தடுத்துள்ளார்கள். மீலாது மேடையும் அந்த வகையைச் சேர்ந்ததே. மனிதர்கள் செய்யும் செயல்கள் குர்ஆன் ஹதீதுக்கு மாற்றமாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது அவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் சரியே.

அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

***பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள். இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள். (அல்குர்ஆன் 6:116)***

### சந்தேகம் - 3

மீலாது விழா கொண்டாடி நபி(ஸல்) அவர்களை நினைவு படுத்துகின்றோம்.

**விடை:** நபி(ஸல்) அவர்களை ஒவ்வொரு நாளும் ஒரு முஸ்லிம் நினைவுபடுத்தியாக வேண்டும். நாம் செய்யும் பர்லான சுன்னத்தான ஒவ்வொரு அமலகளும் இன்னும் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் நபி(ஸல்) அவர்களின் நினைவூட்டலே. நபி(ஸல்) அவர்களின் பெயரைக் கூறாமல் அதான் இகாமத் சொல்ல முடியுமா? உளு செய்த பின் ஷஹாதத்தைனியை மொழிகின்றோம் அதிலும் நபி(ஸல்) அவர்களின் பெயர் மொழியப்படுகின்றது நபி(ஸல்) அவர்களின் பெயர் கூறாமல் தொழத்தான் முடியுமா? இப்படி நபி(ஸல்) அவர்களின் நினைவில்லாமல் ஒரு முஸ்லிம் அவரின் ஒரு நாளென்ன ஒரு நொடிப் பொழுதையாவது கழிக்க முடியுமா? இப்படித்தான் ஒரு முஸ்லிம் இருக்க வேண்டும். ஆனால் இவர்களோ வருடத்தில் ஒரு முறை ரபீஉல் அவ்வல் மாதம் மாத்திரம் நபி(ஸல்) அவர்களை நினைவு படுத்துகின்றார்கள்? அவர்கள், நினைவுபடுத்தும் முறையும்? இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட முறையே. இவர்கள் புதிதாக உண்டுபண்ணியிருக்கும் நினைவூட்டலை விட்டும் நபி(ஸல்) அவர்கள் தேவையற்றவர்கள். அல்லாஹ் நபி(ஸல்) அவர்களின் கண்ணியத்தை உலகெங்கும் உயர்த்தி விட்டான்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

***மேலும் நாம் உமக்காக உம்முடைய புகழை மேலோங்கச் செய்தோம். (அல்குர்ஆன் 94: 4)***

### சந்தேகம் - 4

மீலாது விழா நடத்துவது பித்அத்துல் ஹஸனாவாகும் (நல்ல பித்அத்தாகும்)

**விடை:** நல்ல பித்அத், கெட்ட பித்அத் என்பது இஸ்லாத்தில் கிடையாது. மாறாக எல்லா பித்அத்துக்களும் கெட்டதே என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் 'நிச்சயமாக எல்லா பித்அத்துக்களும் வழிகேடே. (அஹ்மத், திர்மிதி). நஸாயியின் அறிவிப்பில் 'எல்லா வழிகேடுகளும் நரகத்திற்க்குக் கொண்டு செல்லும்' என்று வந்துள்ளது. நபி(ஸல்) அவர்களே எல்லா பித்அத்துக்களும் வழிகேடு என்று கூறியிருக்கும் போது, சில பித்அத்துக்கள்தான் வழிகேடு என்று கூறுவது ஆதாரப்பூர்வமான ஹதீதுக்கு முற்றிலும் மாற்றமான கருத்தாகும். இன்னும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் எங்களின் மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் புதிதாக ஆரம்பிக்கின்றாரோ அது ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது' ஆதாரம்: புகாரி

ஆகவே, இஸ்லாத்தில் இல்லாத ஒன்றை, புதிதாக ஆரம்பித்து செய்யும் எந்த செயலும், அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இப்னு ரஜப்(ரஹ்) அவர்கள் அர்பாஈனன் நவவிய்யாவில் வரும் இந்த வார்த்தைக்கு விளக்கம் அளிக்கும் போது 'இது நபி(ஸல்) அவர்களின் ஜவாமிஉல் கலிம் என்னும்' மிக சுருக்க வார்த்தைகளில்' ஒன்றாகும். எந்த செயலும் இந்த வார்த்தையிலிருந்து விதிவிலக்காக முடியாது எனக் குறிப்பிடுகின்றார்கள். உமர்(ரலி) அவர்கள் தராவீஹ் தொழுகையை ஜமாஅத்தாக தொழ வைத்தது, உத்மான்(ரலி) அவர்கள் குர்ஆனை ஒன்று சேர்த்தது, போன்றவைகளைக் கூறி நல்ல பித்அத்தும் இருக்கின்றதுதானே எனக்கூறுவோருக்கு அதில் எவ்வித ஆதாரமுமில்லை. காரணம் இவைகள் அனைத்திற்கும் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டல் இருக்கின்றது. இந்த கலீபாக்கள் சில காலம் விடுபட்டிருந்ததை புதிப்பித்தார்களேதவிர இவர்கள் புதிதாக ஒன்றை ஆரம்பிக்கவில்லை. விரிவைப் பயந்து நல்ல பித்அத் கெட்ட பித்அத்தைப்பற்றி இங்கு விரிவாக விளக்க முடியவில்லை.

### சந்தேகம் - 5

அபூலஹப் மரணித்த பின் அவரை கனவில் காணப்பட்டது. அவரிடத்தில் உங்களின் நிலை என்ன என்று கேட்கப்பட்டது. நான் நரகத்தில் இருக்கின்றேன், நபி(ஸல்) அவர்கள் பிறந்த செய்தியை எனக்கு துவைபா அம்மையார் அவர்கள் நற்செய்தி கூறியதாலும் நபி(ஸல்) அவர்களுக்கு அப்பெண்மணி பாலூட்டியதாலும் அப்பெண்ணை நான் உரிமையிட்டிருந்தேன். அதனால் ஒவ்வொரு திங்கட் கிழமையும் என் விரல்களுக்கு மத்தியிலிருந்து விரல் நுனியளவு கொட்டும் நீரை நான் உறிஞ்சி குடிக்கின்றேன் என்றார். காஃபிரான, இறைவனால் சபிக்கப்பட்ட ஒருவர் நபி(ஸல்) அவர்கள் பிறந்ததை பற்றி சந்தோஷம் அடைந்ததால் அவருக்கு இந்த சலுகை கொடுக்கப்பட்டதென்றால், உண்மையான ஒரு முஸ்லிம், நபி(ஸல்) அவர்கள் மீது மீலாது விழா கொண்டாடுவதால் அவருக்கு சுவர்க்கம் கிடைப்பது நிச்சயம்.

**விடை:**

1. இந்த ஹதீது முர்சல் என்னும் தரத்திலுள்ளதாகும்.
2. இது மர்பூஉ என்னும் தரத்தில் இருந்தாலும், இது கனவில் காணப்பட்ட ஒரு செய்தியே. கனவில் காணும் செய்திகளை ஆதாரமாக எடுக்க முடியாது.
3. நபி(ஸல்) அவர்களின் பிறப்பு பற்றி நற்செய்தி கூறியதால்தான் அபூலஹப் துவைபா அம்மையாரை

உரிமையிட்டார் என்பது வரலாற்று குறிப்புகளுக்கு மாற்றமானது. அபூலஹப் துவைபா அம்மையாரை நபி(ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த பின்புதான் உரிமையிட்டார் என்றே வரலாற்று குறிப்புகள் கூறுகின்றது. இதுபற்றி இப்னு ஸஃது அவர்கள் 'தபகாத்' என்னும் வரலாற்று ஏட்டில் குறிப்பிடும் போது, 'நபி(ஸல்) அவர்கள் துவைபா அம்மையாருடன் இரத்த உறவு பேணுவார்கள், கதீஜா(ரலி) அவர்களும் துவைபா அம்மையாரை கண்ணியப்படுத்துவார்கள், அந்த நேரத்தில் துவைபா அவர்கள் அடிமையாக இருந்தார்கள். துவைபா அம்மையாரை அபூலஹபிடமிருந்து விலைக்கு வாங்கி உரிமையிட நபி(ஸல்) அவர்கள் கேட்ட போது அதை அபூலஹப் மறுத்துவிட்டார். நபி(ஸல்) மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற பின்பே துவைபா அம்மையாரை அபூலஹப் உரிமையிட்டார். துவைபா அம்மையார் அவர்கள் மரணிக்கும் வரை அவர்களுடன் இரத்த உறவு பேணுபவர்களாக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். துவைபா அம்மையார் அவர்கள் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு மரணித்தார்கள்.

ஆதாரம்: தபகாத் இப்னு ஸஃது

இஸ்தீஆப் என்னும் நூலில் அல் ஹாஃபில் இப்னு அப்துல்பர் அவர்கள் துவைபா அம்மையார் அவர்களின் உரிமையிடல் பற்றி கூறும் போது, 'நபி(ஸல்) மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற பின்பே துவைபா அம்மையாரை அபூலஹப் உரிமையிட்டார்.'

ஆதாரம்: அல் இஸ்தீஆப்

இவ்வாறே இப்னுல் ஜவ்ஸி(ரஹ்) அவர்களும் தனது 'அல் வஃபா ஃபீ அஹ்வாலில் முஸ்தஃபா' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்கள்

4. அபூ லஹப் நபி(ஸல்) அவர்கள் பிறந்ததை கேட்டு சந்தோஷமடைந்தார் என்ற செய்தியும், துவைபா அம்மையார் அவர்கள் அதை நற்செய்தி கூறினார்கள் என்பதும், இந்த நற்செய்தி கூறியதாலே அபூலஹப் துவைபா அம்மையாரை உரிமையிட்டார் என்கின்ற செய்தியும் ஆதாரமற்றதாகும். இந்த சம்பவம் சரி என்று கூறுபவர்களே இதற்குரிய ஆதாரத்தைக் கூறவேண்டும்.

இன்னும் இது போன்ற பல சந்தேகங்கள் இருக்கின்றன. விரிவைப்பயந்து முடிவுக்கு வருகின்றேன். எல்லாம் வல்ல ஏக இறைவன் உலகத்தில் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் நேரான வழியைக் காட்டுவானாக!

☆ ☆ ☆

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 10

*மௌலவி இப்ராஹீம் மதனி M.A.*

கொடிய நோய்களை விட்டு எங்களை பாதுகாத்திடுவாயாக!

أَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْبَرَصِ وَالْجُنُوْنِ وَالْجُذَامِ وَسَيِّئِ الْأَسْقَامِ.

அல்லாஹுஃம்ம இன்னீ அவூது பிக மினல் பரஸி வல் ஜுஃனூனி வல் ஜுஃதாமி வஸய்யியில் அஸ்காமி.

**பொருள்:** யா அல்லாஹ்! வெண்குஷ்டத்தை விட்டும், பைத்தியத்தை விட்டும், கருங்குஷ்டத்தை விட்டும், மோசமான (கொடிய) நோய்களை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன் என்று துஆ செய்யக்கூடியவர்களாக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். (அபூதாவூது)

பசிக் கொடுமையை விட்டுப் பாதுகாப்பாயாக!

أَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْجُوْعِ فَإِنَّهُ بِئْسَ الضَّجِيْعِ، وَأَعُوْذُ بِكَ مِنَ الْخِيَانَةِ فَإِنَّهَا بِئْسَتِ الْبِطَانَةُ.

அல்லாஹுஃம்ம இன்னீ அவூது பிக மினல் ஜுஃஇ ஃபஇன்னஹுஃ பிஃஸல்ழஜீஇ, வஅவூது பிக மினல் கியானதி ஃபஇன்னஹா பிஃஸதில் பிதானது.

**பொருள்:** இறைவா! பசியின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன், நிச்சயமாக அது கெட்ட தோழன் ஆகும். மேலும் மோசடி செய்வதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன், நிச்சயமாக அது மறைந்திருக்கும் கெட்ட பண்பாகும், என துஆ செய்பவர்களாக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். (அபூதாவூது)

ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி விட்டு உரிமை பெற்றுக் கொள்வதற்காக உரிமைச் சீட்டு எழுதிக் கொடுக்கப் பெற்ற ஓர் அடிமை, அலி(ரலி) அவர்களிடம் வந்து (நான் என் எஜமானனுக்கு செலுத்த வேண்டிய) எழுதப்பட்ட தொகையை நிறைவேற்ற இயலாமல் ஆகிவிட்டேன். ஆகவே தாங்கள் எனக்கு உதவி செய்வீர்களா? என்று கேட்டார். அதற்கு அலி(ரலி) அவர்கள், அண்ணல் நபி(ஸல்) அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த சில சொற்களை உமக்கு நான் கற்றுத் தரட்டுமா? என்று கூறிவிட்டு, (அதை நீர் கூறினால்) உமக்கு மலையளவு கடன் இருந்தாலும் அல்லாஹ் அதனை நிறைவேற்றித் தருவான் என்று கூறி (பின்வரும் துஆவை) நீர் கூறுவீராக! என்றார்கள்.

أَللَّهُمَّ أَكْفِنِي بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ، وَأَغْنِنِي بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ.

அல்லாஹுஃம் மக்பினீ பி ஹலாலிக அன் ஹராமிக, வஅங்னினீ பிபள்லிக அம்மன் ஸிவாக.

**பொருள்:** யா அல்லாஹ்! உன் ஹராமான ரிஜ்கை விட்டும், உன் ஹலாலான ரிஜ்கைக் கொண்டு எனக்கு போதுமாக்கி வைப்பாயாக! உன்னைத் தவிர மற்றவரிடம் நான் தேவையாகுவதை விட்டும், உன் அருட்கொடையைக் கொண்டு எனக்கு செல்வச் செழிப்பை அருள்வாயாக! (திர்மிதி)

துஆ கேட்கும் இரண்டு சொற்களை இம்ரான்(ரலி) அவர்களின் தந்தை ஹுஃஸைன்(ரலி) அவர்களுக்கு (பின்வரும் துஆவை) நபி(ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.

أَللَّهُمَّ أَلْهِمْنِيْ رُشْدِيْ، وَأَعِذْنِيْ مِنْ شَرِّ نَفْسِيْ.

அல்லாஹுஃம்மல்ஹிம்னி ருஷ்தீ, வஅஇத்னீ மின் ஷர்ரி நஃப்ஸீ.

**பொருள்:** யா அல்லாஹ்! நேரான வழியை என் உள்ளத்தில் உதிக்கச் செய்வாயாக! என் ஆன்மாவின் தீங்கை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக! (திர்மிதி)

# விசா கிடைக்காமல் இருப்பதும், சர்ப்ப தோஷமும்

*- ஹாஜா முகையிதீன்*

நன்மை, தீமைகள் அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்துதான் ஏற்படுகின்றது என்றிருக்கும்போது, முஸ்லிம்களில் பலர் தனக்கு ஏதேனும் நன்மையான, இலாபம் தரக்கூடிய ஒன்று நடந்துவிட்டால் வெற்றி பெற்றதாக நினைக்கின்றார்களோ, அவைகள் கிடைத்தால் இவைகள் எல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்துதான் கிடைத்தது என்றும் அதற்காக தன்னுடைய முயற்சியும் இருந்தது என்று கூறி அல்லாஹ்வை புகழாமல் நான்தான், என்னுடைய கடின முயற்சியினால் தான் கிடைத்தது என்று கூறி கொள்கின்றனர். அதேவேளை தனக்கு ஒரு துன்பம், துயரம், கவலை, தான் நினைத்ததெல்லாம் நடக்காமல் போனால், எனக்கோ, என் குடும்பத்தார்கோ மார்க்கம் முற்றாக தடுத்த பல்வேறு கற்பனை கதைகளை எடுத்துச் சொல்லி இதுதான் காரணம் என்று கூறக்கூடியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த அடிப்படையில் உள்ள ஒன்றுதான் விசா கிடைப்பதில் தாமதமாகும் சகோதரர்களுக்கு தோஷம் என்றும், சகுனம் என்றும் பல்வேறு பெயர்களை சூட்டி அதனை நீக்கினால் அல்லது பரிகாரம் செய்தால் தாமதம் ஏற்படாது என்று கூறி போலியான, பகட்டான வார்த்தைகளை இளைஞர்கள் மற்றும் குடும்பத்தவர்கள் உள்ளத்தில் திணித்து பணம் செய்பவர்கள் யார் தெரியுமா? திருச்சியில் முகாமிட்டு ஜெக ஜோதியாக தொழிலை நடத்திவரும் சில போலி சாமியார்கள்தான்.

**தோஷங்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்,**

திருமணம் நடக்காமல் தடைபட்டு போகிறதா அப்போது அது செவ்வாய் தோஷம்.

கணவனின் உயிருக்கு அடிக்கடி ஆபத்து வருகிறதா அப்போது அது மாங்கல்ய தோஷம்

நமது குடும்பத்தில் யாராவது ஒருவர் பாம்புக்கு தீங்கு விளைவித்து இருந்தாலோ அல்லது பாம்பை அடித்து கொன்றிருந்தாலோ குடும்பத்தில் பிறக்கும் யாருக்காவது ஒருவருக்கு பாம்பு தோஷம் (சர்ப்ப தோஷம்) பிடிக்குமாம்.

செவ்வாய் தோஷம் இருந்தால், குறிப்பிட்ட வயதில் திருமணம் ஆகாமல் தள்ளிப்போகுமோ? மாங்கல்ய தோஷம் இருந்தால், கணவனின் உயிருக்கு எப்படி அடிக்கடி ஆபத்துகள் வருமோ? அதே போன்று இந்த சர்ப்ப தோஷம் இருந்தால் விசா கிடைப்பதில் சிக்கல் ஏற்படுமாம்.

இதனால் 30 நாளில் நீங்கள் பாஸ்போர்ட் பெற்றுவிட்டாலும் மூச்சை கொடுத்தாலும் விசாவை மட்டும் பெறவே முடியாதாம். ஏற்கனவே குழம்பிபோய் கிடக்கும் நமது பட்டதாரிகளின் குட்டையை மேலும் குழப்பி மீன் பிடிக்க அழைக்கும் ஆசாமிகள்தான் இவர்கள்.

இப்போதைய உலகில் வெளிநாடு வேலை என்பதுதான் பலரின் இலட்சியம். இதனால் இப்போது வீட்டிற்கு ஒரு ரேஷன்கார்டு இருக்கிறதோ இல்லையோ வீட்டிற்கு வீடு ஒரு பாஸ்போர்ட்டாவது (குறைந்த பட்சம்) இருக்கிறது.

திருச்சி மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் மட்டும் ஒரு மாதத்திற்கு 30 ஆயிரம் பாஸ்போர்டுகள் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் இப்படி பாஸ்போர்ட் எடுத்துக் கொள்கிறவர்களில் 80 சதவீதம் பேர் அதை பயன்படுத்தாமல் வீட்டிலேயே வைத்துக் கொள்கிறார்கள் என்பது வேறு விஷயம்.

ஆனால், கம்ப்யூட்டர் என்ஜினீயர்கள் முதல் பிட்டர்கள், எலக்ட்ரீசியன்கள், சப்ளையர்கள், மேஸ்திரிகள் ஆகியோருக்கு வெளிநாடுகளில் வேலை ரெடியாக இருந்தாலும் விசா கிடைக்காமல் இருப்பதால் கவலை ஏற்படுத்திவிடும். விசா இதோ வந்துவிடும் அதோ வந்துவிடும் என்று தகவல்தான் வருமே தவிர விசா மட்டும் வரவே வராது.

தினமும் கனவில் மட்டுமே விமானம் வரும் ஆனால் விசா மட்டும் வராது.

பக்கத்து வீட்டுக்காரன் வெளிநாடு போய் விட்டான், சொந்தக்காரனும் பறந்து போய் விட்டான் ஆனால் எனக்கு மட்டும் வெளிநாடு பயணம் அமைய வில்லையே, விசா கிடைக்கவில்லையே என்று குழம்பித்திரிகின்ற இளைஞர்கள் பலர். திருச்சியில்தான் இளைஞர்கள் பலருக்கு வெளிநாட்டுக்கு அனுப்பும் டிராவல் ஏஜென்சிகள் நிறைய உள்ளன என்பதால் இங்கு வந்து குழம்பித்திரிகின்ற இளைஞர்களை அதிகம் பார்க்கலாம். அப்படி குழம்பும் இளைஞர்களுக்கு ஆதரவு அளிப்பது போல நடித்து சில மோசடி சாமியார்களின் கரம் நீளுகிறது.

பல வருடமாக என்ன பாடுபட்டாலும் உங்களுக்கு விசா கிடைக்காததற்கு சர்ப்ப தோஷம்தான் காரணம் என்று கூறி இளைஞர்களை அதிர்ச்சியில் மூழ்கடிக்கிறார்கள் அந்த போலி சாமியார்கள். பீதியில் உறையும் அந்த இளைஞர்களிடம் கவலை படாதீர்கள் சர்ப்ப தோஷம் நீங்கி விசா கிடைக்க என்னிடம் வழி உண்டு என்று உடனே தீர்வுக்கும் உத்தரவாதம் கொடுக்கிறார்கள்.

மத்திய பஸ் நிலையம், சத்திரம் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் உள்ள மிகப்பெரிய ஹோட்டலில் தான் தங்கியிருக்கிற அறைக்கு இளைஞரை வரக்கூறி சர்ப்ப தோஷம் நீங்க பூஜை நடக்கிறது. பித்தளையில் செய்யப்பட்ட பாம்பு சிலை, வெற்றிலை சூடம் என்று அந்த வாலிபரின் பாஸ்போர்ட் மற்ற சான்றிதழ்களும் வைக்கப்பட்டு பூஜை நடக்கும்.

பூஜை முடிந்ததும் ஒரு சில பொருட்களை சாமியார் கொடுப்பார் அதை பாஸ்போர்ட் பக்கத்திலேயே வீட்டில் வைத்திருக்க வேண்டும் இந்த பொருட்கள் இருந்தால் பாம்பு தோஷம் போய்விடுமாம்.

1 மணி நேரம் நடக்கும் இந்த சர்ப்பதோஷ பூஜைக்கு ரூ 2000 முதல் ரூ 5000 வரை வசூலிக்கப்படுகிறது. விசா கிடைத்து விட்டால் போதும் வெளிநாட்டில் லட்சம் லட்சமாக? சம்பாதிக்கலாம் என்பதால் பணத்தை இளைஞர்கள் தாராளமாக சாமியார்களிடம் இழக்க தயாராகி வருகின்றனர்.

இந்த சாமியார்களுக்கு ஆள் பிடிக்க டிராவல் ஏஜென்சிகள் முன்பு புரோக்கர்களும் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இப்படி தோஷம் போக்குகிறேன் என்று வேஷம் காட்டும் போலி சாமியார்களிடம் ஏமாந்த இளைஞர்கள் பட்டியல் நீள்கிறது. ஆனாலும் போலி சாமியார்களின் தொழில் ஸ்டார் ஹோட்டல் ஏ.சி. அறைகளில் தொடர்கிறது.

அல்லாஹ் நமக்களித்த கல்வி மற்றும் அறிவை கொண்டு இதுபோன்ற மார்க்கம் தடுத்த, பெரும் பாவமாகிய ஷிர்க்கிலிருந்து முற்றுலுமாக தடுத்து கொள்வது மட்டுமல்லாமல் நம்முடைய பொருளாதாரம் வீணான வழிகளில் சுரண்டப்படாமல் இருக்கவும் அல்லாஹ் நம் அனைவருக்கும் உதவி புரிவானாக.

☆ ☆ ☆

# எம். எஸ். வேர்டில் – சில எளிய வழிகள்

*- மாலிக் கான் M.S.c.*

## F4

வேர்ட் தொகுப்பில் பல எளிய வழிகள் இருக்கின்றன. நாம் அதை அறியாமல் இருந்தால் அதற்காக அதிக நேரம் செலவழிக்க வேண்டும். எளிய வழியினை அறிந்திருந்தால் நேரம் வெகுவாகக் குறையும். பார்மேட் செய்வதில் சில எளிய வழிகள்.

எம்.எஸ் வேர்டில் நீங்கள் பல வரிகளைக் கொண்ட கோப்பை (file) உருவாக்கிய பின் அதில் இடையிடையே பல சொற்களை போல்ட் ஆக மாற்ற வேண்டுமெனில் நாம் ஒவ்வொரு சொல்லாக தேடித் தேடி பின் Cntl+ B அல்லது டூல்ஸ் பாரில் இருக்கும் B (போல்ட்) ஐக்கானைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு முறையும் செய்வோம். இதைத் தவிர்க்க நீங்கள் கடைசியாக செய்த மாற்றத்தை அடுத்தடுத்த சொற்களுக்கும் செய்ய விரும்பினால் சொற்களை தேர்வு செய்து F 4 பட்டனை அழுத்துங்கள். அதேபோன்று கடைசியாக நீங்கள் ஒரு சொல்லின் பாண்ட்(எழுத்துரு) அளவு அதிகரித்தீர்கள். அதற்கு அடுத்து வேறு ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்து அச்சொல்லையும் அதே அளவு பாண்ட் அதிகரிக்க விரும்பினால் சொல்லை தேர்ந்தெடுத்து F4 பட்டனை மட்டும் அழுத்தினால் போதும்.

## Shift + F5

வேர்டில் நாம் அதிக பக்கங்கள் கொண்ட டாக்குமெண்டை எடிட் செய்துகொண்டிருக்கும் போது ஒரு சொல்லை தேர்ந்தெடுத்து அதன் வண்ணமோ, எழுத்துருவோ, அல்லது அதன் அளவை அதிகப்படுத்தியோ இருப்போம். பின் அதை விட்டுவிட்டு வேறு ஒரு பக்கத்திற்குச் சென்றிருப்போம் தற்போது கடைசியாக மாற்றம் செய்த சொல்லுக்குச் செல்லவேண்டும் எனில் ஷிப்ட்+F5 பட்டன்களை அழுத்தவும். கர்ஸர் ஆனது நீங்கள் கடைசியாக மாற்றம் செய்த இடத்திற்குச் செல்லும் மீண்டும் ஷிப்ட்+F5 அழுத்தினால் அதற்குமுன் மாற்றம் செய்த இடத்திற்கு கர்ஸர் செல்லும். தேவைப்படும் இடங்களில் நாம் மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

## டேபிள்

வேர்டில் நாம் ஒரு டேபிளை உருவாக்க வேண்டுமானால் வழக்கமாக டேபிள் மெனுவிற்குச் சென்று இன்சர்ட் – டேபிள் அல்லது டூல்ஸ் பாரிலுள்ள ஐகானை பயன்படுத்தியே டேபிளை உருவாக்குவோம்.

**இதை எளிய வழியிலும் உருவாக்கலாம்.**

உதாரணமாக 3 நெடு வரிசை(Column) கொண்ட டேபிளை உருவாக்குவதற்கு, இவ்வாறு டைப் செய்தால் போதும்.

```
+--------------+------------+--------------+
```

அதாவது முதலில் + குறியை டைப் செய்யுங்கள். அதைத்தொடர்ந்து ---- (ஹைபன்) குறியை எவ்வளவு அகலத்திற்கு முதல் நெடுவரிசை (Column) வேண்டுமோ அந்த அளவு டைப் செய்யுங்கள். பின் + குறியை டைப் செய்யுங்கள். இவ்வாறு எந்த அளவிற்கு நெடுவரிசைகள் வேண்டுமோ அந்த அளவிற்கு டைப் செய்து எண்டர் தட்டினால் டேபிள் உருவாகிவிடும். மீண்டும் படுக்கை வரிசைகள் (ROW) எத்தனை வேண்டுமோ அத்தனை வரிசைகளை TAB பட்டனை கொடுத்தால் அடுத்தடுத்து ROW வரிசைகள் அதிகமாகிக் கொண்டே செல்லும்.

## எம்.எஸ் வேர்டில் - கால்குலேட் கமாண்ட் (Calculate Command)

பொதுவாக எக்சலில்தான் கால்குலேட் செய்வதற்கு அதிகமான வசதிகள் இருக்கின்றன. எனினும் எம்.எஸ் வேர்டில் சில சமயம் கணக்குகள் செய்வதற்கு கால்குலேட்டரையோ அல்லது எக்சல் பயன்பாட்டிற்கோ நாம் தாவுவோம். இதைத் தவிர்த்து எம்.எஸ். வேர்டில் இருந்த படியே சிறிய சிறிய +, - மற்றும் * (கூட்டல், கழித்தல், பெருக்கல்) போன்ற கணக்குகளை கால்குலேட் கமாண்ட் மூலமாக செய்திடலாம்.




இதற்கு முதலில் எம்.எஸ் வேர்டின் மெனுபாரில் "கால்குலேட்" கமாண்டை கொண்டு வரவேண்டும். இதற்கு மெனுபாரில் உள்ள TOOLS->Customize ஐ செலக்ட்செய்யவும். பின் படத்தில் காணப்படும்

Customize மெனுவிலுள்ள Command என்ற TAB பட்டனை அழுத்துங்கள். இதில் வலது புறத்தில் All Command-ஐ தேர்வு செய்யுங்கள். பின் இடது புறத்திற்குச் சென்று அதிலுள்ள பட்டியலில் Tools Calculate-ஐ அழுத்தி எம்.எஸ் வேர்டின் Tool Bar-ன் ஒரு பகுதியில் விட்டுவிடுங்கள். இப்பொழுது இந்த கட்டளையானது எம்.எஸ் வேர்டின் டூல்ஸ் பாரின் ஒரு பகுதியில் அமைந்துவிடும். பொதுவாக இது மற்ற கமாண்ட்களைப் போன்றல்லாமல் கிரே (gray) கலரில் இருக்கும்.

எம்.எஸ் வேர்டில் நீங்கள் எண்களை டைப்செய்து செலக்ட் செய்யும் போது இது மற்ற கட்டளைகளைப் போல் மாறிவிடும். இனி கால்குலேட் எப்படிச் செய்யலாம் எனில், உங்கள் வேர்டில் 120-30 என்று டைப் செய்து அதைச் செலக்ட் (select) செய்யுங்கள் பின் எம்.எஸ் வேர்டில் ஏற்கனவே அமைத்த Tools Calculate கட்டளையை செலக்ட் (select) செய்யுங்கள். உங்கள் விடை எம்.எஸ் வேர்டின் கீழே அமைந்துள்ள ஸ்டேடஸ் பாரில் (status bar) சிறிது நேரம் தெரியும்.

உதாரணமாக 50 30 2 இவற்றின் கூட்டுத்தொகை கணக்கிடவேண்டுமானால் எண்களை ஸ்பேஸ் விட்டு அல்லது 50, 30, 2 என கமா (comma) கொடுத்து டைப் செய்யுங்கள். பின் இந்த எண்களை செலக்ட் (select) செய்து டூல்ஸ் கமாண்டை (tools command) கொடுங்கள் விடையை எளிதாக கீழே கண்டுகொள்ளலாம்.

குறிப்பு: மேற்கூறிய செய்திகள் எம்.எஸ். வேர்டின் 2000 - 2003 வரையிலுள்ள வெளியீடுகளுக்கு (versions) மட்டுமே. புதிதாக வந்துள்ள எம்.எஸ் வேர்டு 2007 ல் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனை தற்போதைக்கு அதிகமான மக்கள் பயன்படுத்தாத காரணத்தினால் அதிகமாக மக்கள் உபயோகிக்கக் கூடிய எம்.எஸ் வேர்டு 2000 - 2003 வெளியீடுகளிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்க.

# மக்கா-மதினா அதிவேக நவீன இரயில் திட்டம்

*-அபூ உமர்*

மக்கா-மதினா அதிவேக இரயில் போக்குவரத்து திட்டத்திற்கு சவுதி அரேபியாவின் மன்னர் அப்துல்லாஹ் உத்தரவு பிறப்பித்துள்ளார். ஹஜ் மற்றும் உம்ரா புனிதப் பயணங்களில் புதிய வசதியை ஏற்படுத்தி தரும் இத்திட்டத்தின் மதிப்பு சுமார் 20 பில்லியன் சவுதி ரியால் (சுமார் 5.33 பில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும்.

இப்புதிய திட்டம் தரும் வசதியின்படி, மணிக்கு 300 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய அதி நவீன இரயிலில், 30 நிமிடத்தில் மக்காவிலிருந்து ஜித்தாவிற்கும், 2 மணிநேரத்தில் மதினாவிற்கும் செல்ல முடியும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் ஜபாரா அல் ஸராய்ஸ்ரி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் சுமார் 500 கி.மீ புதிய அதிநவீன மின்சார இரயில் பாதை மக்கா-ஜித்தா-மதினாவிற்கு இடையே போடப்படும். இப்புதிய இரயில்பாதை அதிநவீன தொழில்நுட்பத்துடன் சிறந்த தகவல் தொடர்பையும் உள்ளடக்கியதாக இருக்கும். சவுதி அரேபியாவின் நவீன தொழில்நுட்ப போக்குவரத்தை இத்திட்டம் மேலும் அதிகப்படுத்தும் என்பதாகத் தெரிகிறது.

இரயில் பாதை அமையும் இடங்களுக்காக அரசு கையகப்படுத்தும் நிலங்களை மதிப்பிட பிரத்யேக கமிட்டி அமைக்கப்பட்டு அதற்கான தொகையை நிலத்தின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்




என்று தெரிகிறது. ஜித்தா இஸ்லாமிய துறைமுகம், மன்னர் அப்துல் அஜீஸ் பன்னாட்டு விமான நிலையம் மற்றும் ராபிக் நகரில் உள்ள மன்னர் அப்துல்லாஹ் தொழிற்நுட்பப் பூங்கா ஆகிய இடங்களில் இதற்கான இரயில் நிலையங்கள் அமையும்.

அல்-ராஜி குழுமம், சவுதி பின்லாடின் குழுமம், சவுதி ஓஜர் குழுமம், சவுதி ஜப்பானிஸ் குழுமம், அல்ஷோலாஹ் குழுமம் மற்றும் OHL பன்னாட்டு குழுமம் ஆகிய ஆறு பெரிய குழுமங்கள் இத்திட்டத்திற்கான டெண்டர்களில் போட்டியிடும் என்று தெரிகிறது.

இத்திட்டத்தின் கீழ் குறைந்த நேரத்தில் நவீன வசதியுடன் பாதுகாப்பான முறையில் சுமார் வருடத்திற்கு 10 மில்லியன் உம்ரா மற்றும் ஹஜ் பயணிகள் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் 2010-ல் சுமார் 500 மில்லியன் சவுதி ரியால்கள் ஆண்டு வருமானமாக எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டமானது சவுதி அரேபியாவின் மிகப் பெரிய இரயில் திட்டங்களான (சுமார் 950 கி.மீ. தூரம்) ஜித்தா-ரியாத் மற்றும் (சுமார் 115 கி.மீ. தூரம்) தம்மாம்-ஜுபைல் இரயில் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

மூலம்: அரப் நியூஸ்

# அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகள் (பாகம் 17)
## பவளப்பாறைகள் - கடல்வாழ் உயிரினங்களின் மறைவிடம்

*(ஆங்கில மூலம்: ஹாரூன் யஹ்யா) தமிழில் : அபூ இஸாரா*

முதன்முதலில் நீங்கள் கடல் நீரடிப் பவளப் பாறைகளை பார்த்தவுடன் அவைகள் கண்ணைக் கவரும் வர்ணங்களுடன் கூடிய பாறைப்படிவங்கள் எனக் கருதியிருப்பீர்கள். அவ்வாறு கருதியிருந்தால், உங்களது கருத்து தவறானதாகும். ஏனெனில் கடல் நீரடி பவளப்பாறைகளும் கடல் வாழ் உயிரினங்களே. கோடிக்கணக்கான பவளங்கள் ஒன்றிணைந்து பிரத்யேகமான முறையில் தங்களை மறைத்துக் கொண்டு உயிர்வாழும் இந்த உயிரினங்கள், நம் கண்களுக்கு வர்ணங்களுடன் கூடிய பாறைப்படிவமாக தோன்றுகிறது.

இறந்துபோன பவளங்களின் மிஞ்சிய எச்சங்கள் சுண்ணாம்பாக மாறி, காலப்போக்கில் இந்த சுண்ணாம்புப் படிவங்கள் பவளக் கூடுகளாக உருமாறி, எண்ணற்ற உயிரினங்கள் ஒன்றிணைந்து வாழும் இடமாக மாறுகிறது. இந்த பவளப்பாறைகளில் வாழும் ஒவ்வொரு மீனினமும் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளை கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு பகல் நேரங்களில் வேட்டையாடும் வழக்கமுள்ள, ஆங்கில மொழியில் ஏஞ்சல்ஃபிஸ் என்றழைக்கப்படும் மீனினம், சூரியன் மறைந்ததும் பவளப்பாறைகளின் வெடிப்புகளோடு வெடிப்பாக அமைதியாக ஒதுங்கிக் கொள்கிறது.



பவளப்பாறைகளில் வாழும் மீனினங்களின் நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் மாறுபட்ட தன்மைகள் கொண்டதாக அமைந்துள்ளன. உதாரணத்திற்கு சில மீனினங்கள், கிளமீன்கள் போன்றவை, தங்களது பாதுகாப்பு கவசத்தில் முழுவதுமாக உறங்குகின்றன. முதுகில் முள்ளெலும்புள்ள சிலவகை மீனினங்கள் பாதி உறக்கத்திலும், பாதி விழிப்புற்ற நிலையிலும் ஓய்வெடுக்கின்றன. மனிதர்கள் உணவாய் உட்கொள்ளும் சிலவகை செம்மீன்கள் பகல் வேளையில் ஒளிமிக்க வர்ணங்களுடன் காட்சியளிக்கின்றன. ஆனால் இரவு நேரங்களில் தங்களது நிறத்தை மங்கலான வெளிறிய வர்ணத்திற்கு மாற்றிக் கொள்கின்றன.

கடற்பாசிகள், பவளப்பாசிகள் மற்றும் முட்டையிடும் மீனினங்களில் ஒருசில இந்த பவளப்பாறைகளில் உயிர்வாழ்கின்றன. இத்துடன், சிறிய நண்டுகள், இறால் மீன்கள் போன்றவை சாதாரண மனித கண்களால் பார்க்க முடியாத கடல்தாவரங்களில் உயிர்வாழும் உயிரினங்களை உணவாகக் உட்கொள்வதற்கு பவளப்பாறைகளுக்கு வருகின்றன. சுறாமீன்கள் மற்றும் கடல் விலாங்கு மீன்கள் போன்றவை தங்களது அதீத மோப்ப சக்தியைப் பயன்படுத்தி, வேட்டையாடுவதற்காக இருள் நிறைந்த பவளப்பாறைகளில் உயிர்வாழ்கின்றன.

கடல் நீரடிப் பாறைகளில் வாழும் வகையில் அல்லாஹ் படைத்த எண்ணற்ற கடல்வாழ் படைப்பினங்களும், அவைகளுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கும் தனித்தன்மை வாய்ந்த சிறப்பியல்புகளும் அல்லாஹ்வின் இணையற்ற படைப்பாற்றலையும், எல்லையில்லா அறிவையும் நமக்கு பறைசாற்றுகின்றன. அருள்மறை குர்ஆனின் பதினாறாவது அத்தியாயம் ஸூரத்துன் நஹ்ல்-ல் வல்ல அல்லாஹ் தான் படைத்த படைப்பினங்களில் சிலவற்றை நமக்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டுகிறான். அதற்காக நாம் வல்ல அல்லாஹ்வுக்கே நன்றி செலுத்துமாறும் நம்மை வலியுறுத்துகிறான்.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்:

*'இன்னும், பூமியில் அவன் படைத்திருப்பன பல விதமான நிறங்களை உடைய (செடி கொடிகள், பிராணிகள், பறவைகள் போன்ற)வையும் ஆகும், நிச்சயமாக இதில் நினைவு கூறும் மக்களுக்கு(த் தக்க) அத்தாட்சியுள்ளது. நீங்கள் கடலிலிருந்து நய(மும், சுவையு)முள்ள மீன் போன்ற மாமிசத்தை புசிப்பதற்காகவும், நீங்கள் அணிந்து கொள்ளக்கூடிய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்தவும் அவன் தான் அதனையும் (கடலையும்) வசப்படுத்தித் தந்தான். இன்னும் அதில் தண்ணீரைப் பிளந்து கொண்டு செல்லும் கப்பலை நீங்கள் காணுகிறீர்கள். (பல்வேறு இடங்களுக்குச் சென்று) அவன் அருட்கொடையை நீங்கள் தேடவும், நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டும் (அதை) இவ்வாறு வசப்படுத்திக் கொடுத்தான்.' (அல்குர்ஆன் 36:13-14)*

## உடல் பருமனாகாமல் தடுக்க காலை உணவு உண்பீர்!

'பருமனைக் குறைக்கிறேன்' என்று கூறி, காலை உணவை பலரும் தவிர்க்கின்றனர். இந்த முயற்சியால் உடல் எடைக் கூடுமே தவிர, குறையாது என்பது அவர்களில் பலருக்கும் தெரிவதில்லை.

காலை உணவைத் தவிர்க்கும் பலர், நொறுக்குத் தீனிகளையும், டீ மற்றும் காபி வகைகளையும் உட்கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்வர். இதனால், உடல் இளைப்பதற்கு பதிலாக பருமனாவது மட்டுமின்றி, உடல் உறுதியும் குறையும்.

இதுதொடர்பாக அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஐந்து ஆண்டுகளை எடுத்துக்கொண்டு, 2,216 பேர்களை மாதிரிகளாக வைத்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். அந்த ஆய்வு, 15 வயதுக்கு குறைவானவர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆய்வின் முடிவில், நாள் தோறும் தவறாமல் காலை உணவை உண்பவர்களுக்கு உடல் ஆரோக்கியம் நிறைந்து காணப்படுவதுடன், உயரத்துக்கு ஏற்ற எடையை மட்டுமே கொண்டுள்ளதும் கண்டறியப்பட்டது.

இதனால், காலை உணவைத் தவிர்க்காமல் சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்வதே சாலச் சிறந்தது என்பது தெளிவு.

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 4:6

## போட்டிக்குரிய கேள்விகள்

1. கஃபத்துல்லா கட்டப்பட்டு எத்தனை ஆண்டுகளில் பைத்துல் முகத்திஸ் கட்டப்பட்டது?
   a. வரையறையில்லை b. 40 ஆண்டுகள்
   c. 100 ஆண்டுகள் d. 63 ஆண்டுகள்
2. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் இஸ்லாத்தில் சிறந்தது (பசித்தோருக்கு) உணவளிப்பதும், அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் ------------- என்றார்கள்.
   a. ஸலாம் கூறுவதும் b. தண்ணீர் புகட்டுவதும்
   c. ஆடை அணிவிப்பதும் d. கடன் கொடுப்பதும்
3. 'பிற முஸ்லிம்கள் எவருடைய நாவு மற்றும் இவற்றின் தொல்லைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே முஸ்லிமாவார்.
   a. பொறாமையின் b. கையின்
   c. செல்வத்தின் d. கல்வியின்
4. பெண்களில் சிறந்தவர்கள் (மதீனத்துப் பெண்களான) அன்ஸாரிப் பெண்களே, காரணம்
   a. புர்கா அணிபவர்களாக இருந்தார்கள்
   b. அதிகமாக செல்வம் பெற்றிருந்தார்கள்
   c. மார்க்கத்தைக் கற்றுக் கொள்ள வெட்கம் ஒரு போதும் தடையாக இருந்ததில்லை
   d. திருக்குர்ஆனை மனனம் செய்திருந்தார்கள்.
5. யாருக்கு இந்த தொழுகை தப்பிவிட்டதோ அவர் தனது குடும்பம் மற்றும் பொருள்கள் ஆகியவற்றை அவரிலிருந்து பிடுங்கப்பட்டவரை (இழந்தவரை)ப் போன்றவராவார் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
   a. பஜர் b. இஷா
   c. லுஹர் d. அஸர்

---

## அறிவுப் போட்டி - 4:4 க்கான விடைகள்

1. நல்ல ஸாலிஹான மனைவி
2. தன் குடும்பத்தாருக்கு அவன் செலவழிக்கும் பொற்காசு
3. அழுவீர்கள்
4. ஐந்து வேளை தொழுகைக்கு
5. ஷைத்தான்
6. முஸ்அப் பின் உமைர்(ரலி)
7. மனைவியரிடம்
8. அல்லாஹ்வின் அச்சத்தால் வடிந்த கண்ணீர்த் துளிகள்
9. ஸூரத்துல் கஹ்பின்
10. சுவர்க்கமாகும்
11. செல்வம்
12. நன்மைகளையும்
13. பரிந்துரை
14. தடுத்து
15. ஆஷுரா
16. முஸ்லிமாவார்
17. மத்திய கிழக்கின் சிறந்த சாதனையாளர் விருது
18. இஹ்ஸான்
19. வாய் மூடி மௌனமாக இருக்கட்டும்
20. சுவனம்

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாக அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 29 அல்லது 30ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

**அறிவுப் போட்டி - 4:4 க்கான பரிசு பெறுபவர் : M.S.A. ரஜாக்**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

### அல்ஹம்துலில்லாஹ்

"சுவனப்பாதை" மாத இதழ் தற்போது இணையத்தில்!!!

**www.suvanam.com**

"சுவனப்பாதை" முந்தைய பதிப்புகள் PDF கோப்புகளாக பதிவிறக்கம் செய்து படித்துப் பயன்பெறுங்கள்.